உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 02 ஞாயிற்றுக்கிழமை (17.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 22

# வாகரையில் மோதலை நிறுத்துமாறு இரு தரப்புகளிடமும் ஐ.நா. கோரிக்கை

## அகதிகள் பாதுகாப்பாகப் பயணம் செய்வதை உறுதி செய்யவும் வலியுறுத்து

நியூயோர்க்,டிசெம்பர்17

இலங்கையின் கிழக்குக் கரையோரப் பிரதேசமான வாகரையில் மோதல்களை நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபை அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் கேட்டுள்ளது.

அகதிகளின் பாதுகாப்பான பயணத்தையும் இரண்டு தரப்புகளையும் ஐ.நா. வலியுறுத்தியுள்ளது.

ஜேர்மனியின் செய்திச் சேவையான டி.பி.ஏ. இத்தகவலை நேற்று வெளியிட்டது.

தொடர்ந்து மோதல்கள் நடைபெற்று வரும் வாகரைப் பகுதியிலிருந்து படகுகளில் இடம்பெயர்ந்து சென்று கொண்டிருந்தவேளை இரண்டு படகுகள் கவிழ்ந்ததால் 14 பேர் உயிரிழந்திருந்தனர். நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை இச்சம்பவம் நடைபெற்றது தெரிந்ததே.

இச்சம்பவத்தை கவனத்தில் எடுத்தே ஐக்கிய நாடுகள் சபை வாகரைப் பகுதியில் மோதல்களை நிறுத்துமாறு இரண்டு தரப்புகளிடமும் கேட்டுள்ளது.

வாகரைப் பகுதியில் அகதிகள் பாதுகாப்பாகப் பயணம் செய்வதனை இரண்டு தரப்பாரும் நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று ஐ.நா. வலியுறுத்தி உள்ளது.

விரக்தியுற்ற மக்கள், சிறிய வள்ளங்களில் பயணம் செய்வதால் தமது உயிர்களைத் தினமும் பணயம் வைக்கிறார்கள். எந்தவழியிலேனும் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிடவேண்டும் என்ற அவசரத்தில் காணப்படுகின்றனர். ஆகையால் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது போன்ற துர்ப்பாக்கியமான சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறக்கூடும். - ஐ.நா. வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் மீது அரச இராணுவத்தினர் நடத்திய ஷெல் தாக்குதல்களால் சுமார் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள். அவர்களில் சிலர் கடற்கொந்தளிப்பின் மத்தியிலும் தாம் தங்கிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து செல்கிறார்கள் -

விடுதலைப் புலிகள் நடத்திய ஷெல் தாக்குதல்களினாலும் சுமார் 4 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். - என்று டி.பி.ஏ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

## வவுனியாவில் வர்த்தகர் சுட்டுக்கொலை!

வவுனியா,டிசெ.17

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

வவுனியா நகரில் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்திவரும் அம்பிகைபாகர் மாணிக்கவாசகர் (வயது 59) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இரு வாகனங்களில் அவரது கடைக்கு வந்த ஆயுததாரிகள் அவரை வெளியே அழைத்து சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா நீதிவான் இக்கொலை குறித்து சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினார். (1)

## வாகரையில் சூனியப் பிரதேசம் நிறுவப் புலிகள் சர்வதேச அமைப்புகளிடம் யோசனை முன்வைப்பு

### தனித்தனியே சந்தித்துப் பேச்சு

கிளிநொச்சி,டிசெ.17

வாகரை ஆஸ்பத்திரி மற்றும் பாடசாலையை அண்டிய பகுதிகளை பாதுகாப்புப் பிரதேசமாக பிரகடனப்படுத்த வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசிய போதே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் இந்தக் கோரிக்கையைத் தாம் கொழும்புக்கு எடுத்துச் சென்று அரசாங்கத் தரப்புடன் பேசி பதிலை அறிவிப்பதாக மூன்று அமைப்புகளின் பிரதிநிதிகளும் வாக்குறுதி அளித்தனர்.

சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் பிரதிநிதி கற்ஜா வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கும், அன்றை தினம் நண்பகலில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வன்னிப் பிரதிநிதி 'பார்ஸ் பிளேமன்னும் -

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் வன்னிப் பிரதிநிதி கஜ்டமாக் சனிக்கிழமை காலை 8.30 மணியளவிலும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை கிளிநொச்சி சமாதான செயலகத்தில் தனித்துச் சந்தித்துப் பேசினர். (08ஆம் பக்கம் பார்க்க)



செஞ்சிலுவைக் குழுவினருடனான சந்திப்பின் போது..

## பாதுகாப்பு அனுமதிக்கான படிவங்களை அண்மையிலுள்ள முகாம்களில் பெறலாம்

### யாழ்.சிவில் நிர்வாகம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.17

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்குச்செல்பவர்கள் பாதுகாப்பு அனுமதிக்கான படிவங்களை தமது வதிவிடத்துக்கு அருகில் உள்ள இராணுவ முகாம்களில் பெற்றுக்கொள்ளலாம்.

கப்பல் மற்றும் விமானம் மூலம் வெளி மாவட்டங்களுக்குச் செல்வோர் பாதுகாப்பு அனுமதி பெறவேண்டிய நடைமுறை இப்போது அமுலில் உள்ளது.

இந்த அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்களை பொதுமக்கள் தமக்கு அண்மையில் உள்ள முகாம்களில் பெற்றுக்கொள்ளுமாறு சிவில் நிர்வாக அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது. (1)

## கிழக்கிலங்கை பல்கலை துணைவேந்தர் கொழும்பில் வைத்துக் கடத்தப்பட்டார்

யாழ்ப்பாணம்,டிசெ.17

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.ரவீந்திரநாத்தை நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.15 மணியில் இருந்து காணவில்லை என தெகிவளைப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு, பௌத்தலோக மாவத்தையில் வைத்து அவர் காணாமற்போயுள்ளார்.

இவர் தமது பதவி விலகல் கடிதத்தை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில் கையளித்துவிட்டுத் திரும்பிய பின்னரே காணாமற்போயுள்ளார் என்றும் -

இவரை இராணுவத் துணைக்குழு ஒன்று கடத்தியிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது. (அ-1)

## சமாதானத்தின் நடுச்சுவர் விழுந்துவிட்டது — போவர்



ஈகைச்சுடர் ஏற்றும் போவர்.

ஒஸ்லோ,டிசெ.17

கட்டி, கட்டியாக வைத்து மிகுந்த கஷ்டப்பட்டு கட்டப்பட்ட 'சமாதானத்தின்' நடுச்சுவர்விழுந்துவிட்டது. நோர்வே தனது நம்பிக்கைக்குரிய நண்பனை இழந்துவிட்டது.

அன்ரன் பாலசிங்கம் அனுபவம் நிறைந்த மனிதர் மட்டுமல்லர். அவர் பேச்சு வார்த்தை நடத்துவதிலும் வல்லவர்.

இவ்வாறு தெரிவித்தார் நோர்வே சமாதானத் தூதுவர் ஹன்சன் போவர்.

ஒஸ்லோ வாழ் தமிழர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கத்துக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அந்நிகழ்வில்கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நோர்வே வாழ் தமிழர்கள் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் நோர்வேயின் விசேட தூதர் ஹன்ஸன்போவர், பாலசிங்கத்துக்கு சிறுநீரக மாற்றுச் சிகிச்சை செய்த வைத்திய நிபுணர் பேர் பௌக் கால்ட், ஒஸ்லோ பிரதேசத் தலைவர் ஈவர் கிறிஸ்தியான்ஸன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

[illegible] (08ஆம் பக்கம் பார்க்க)

## கோடிக்கரையில் தமிழக மீனவர் மீது சூடு!

சென்னை, டிசெ.17

தமிழகத்தில் கோடிக்கரை கடற்பகுதியில் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை நேற்றுத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது. அதனால் அந்தப் பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இலங்கைக் கடற்படையினர், விடுதலைப்புலிகளின் கடல் நடமாட்டத்தைக் கண்காணிப்பதாகக் கூறிக்கொண்டு தமிழக மீனவர்களைத் தொடர்ச்சியாக தாக்கி வருகின்றனர்.

அத்தகைய தாக்குதல் சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமையும் நடத்தப்பட்டுள்ளது. அதன் விளைவாக - 20 மீன்பிடி வள்ளங்களில் தொழில் செய்து (08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சண்முகநாதசர்மா யோகானந்தேஸ்வரி



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகநாதசர்மா யோகானந்தேஸ்வரி (15.12.2006) வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் சண்முகநாதசர்மாவின் (தர்மகர்த்தா மனோன்மணி அம்மன் கோயில்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற இரத்தினசாமிக்குருக்கள் - கமலாம்பிகை அம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சாதாசிவக்குருக்கள் - நாகம்மாஅம்மாவின் மகளும் கிரிஜா, காயத்ரி ஆகியோரின் அன்புத் தாயும் கிருஷ்ணநாதனின் அன்பு மாமியும் கிரிவாசன், கிரிசுதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜோதீஸ்காமக்குருக்கள், திருச்செந்திநாதசர்மா, இரத்தினசபாபதிசர்மா, பாலசுப்பிரமணியசர்மா, கருணாகரசர்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் சிவகாமசுந்தரி, உருத்திரதாசசர்மா, சாரதாம்பாள், சுசிலாதேவி, மனோன்மணிஅம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் குகன், அபிராமி, சுபா ஆகியோரின் பெரியம்மாவுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
*மனோன்மணி அம்மன் கோயில், நல்லூர் வடக்கு வீதி.* (56946)

## திருமேனி நடராஜா

[இளைப்பாறிய ஆசிரியரும், அகில இலங்கை சமாதான நீதிவானும்]



நீராவியடியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமேனி நடராஜா நேற்று (16.12.2006) சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற திருமேனி - கனகம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற கந்தையா - சரஸ்வதி தம்பதியரின் மருமகனும் விஜியநாயகி (ராணி) யின் அன்புக் கணவரும், பாலமுரளி (மக்கள் வங்கி, பிரதான வீதிக் கிளை), பாலமோகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், சிவசுப்பிரமணியம், பூரணம் ஆகியோரின் சகோதரனும் தியாகமூர்த்தி, சிவானந்தம் செல்வநாயகி, சத்தியானந்தமூர்த்தி ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2006) மு.ப. 10 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் கட்டைஆலடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்* (58157)
மனைவி, பாலமுரளி
(மகன் - மக்கள் வங்கி பிரதான வீதிக் கிளை)

## விசாகமுத்து பொன்னம்பலம்



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விசாகமுத்து பொன்னம்பலம் 14.12.2006 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற விசாகமுத்து - சின்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் ஆச்சிமுத்துவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராசலிங்கம், நேசமலர், வடிவேலு, காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வநாயகம் (கனடா), ஜெயராசா (வவுனியா), தேவதாஸ், ஸ்ரீராதா, ஸ்ரீரஞ்சினி, சிவராசா(கனடா), ஸ்ரீறதி, ஸ்ரீதரன் (சுவிற்சர்லாந்து), ஸ்ரீராகினி (டென்மார்க்), ஸ்ரீற்யனி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசேஸ்வரி, காஞ்சனாதேவி, குணநாயகி, கைலைநாதன், சிவபுத்திரன், இராசமலர், கௌரீஸ்வரன், ஞானசோதி, சிவரூபன், நிமலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2006) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சுதுமலை வடக்கு, மானிப்பாய்.* (58153)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## நல்லதம்பி கணேசன் (பசறைகணேசன்)



காரைநகர் ஆயிலியைச் சேர்ந்தவரும் தற்போது யாழ்ப்பாணத்தைச் வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் பிரபல வர்த்தகர் நல்லதம்பி கணேசன் நேற்று (16.12.2006) சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி (ஆசிரியர்) - வள்ளியம்மை தம்பதியரின் சிரேஷ்ட மகனும் காலஞ்சென்ற முருகேசு - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் இராஜேஸ்வரி, பத்மநாதன் (சிறிகணேஸ் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), யோகநாதன் (சிறி கணேசா ஸ்ரோர்ஸ், சுன்னாகம்), சற்குணேஸ்வரி, விக்கினேஸ்வரன் (ஆசிரியர், பசறை தமிழ் ம.வி.), செல்வராசா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பொ. சிவானந்தராசா (அதிபர், கோப்[illegible]ப்ம.[illegible]), சிவபாக்கியம், சித்திரா, புண்ணியமூர்த்தி (அதிபர், பண்டத்தரிப்பு G.T.M.S.), அனுசா (பசறை), மகாலட்சுமி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனும் சிவபிருந்தன், சிவவதனி, சிவறுக்சி, சிவதாட்ஷாயினி, சாணுகா, சியாந்தினி, சியாந்தன், சியாமினி, திவ்யா, சரண்யா, நிரோஜன், நிருஜன், கோகுல், ராகுல் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு, நாகம்மா, பாலசுப்பிரமணியம், சந்திரசேகரம் ஆகியோரின் சகோதரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10மணிக்கு கோபால் லேன் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

9/5, கோபால் லேன்,
யாழ்ப்பாணம். (56939)
தகவல்: பரமேஸ்வரி, (மனைவி)

## திருமதி கமலா மாணிக்கவாசகர்

**(Staff, Leopards Hills Secondary School, Lusaka, Zambia and formerly staff St.Bridget's Convent, Colombo)**



திருமதி கமலா மாணிக்கவாசகர் (Staff, Leopards Hills Secondary School, Lusaka, Zambia and formerly staff St.Bridget's Convent, Colombo) காலமானார். அன்னார் கரணவாய் வடக்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சட்டத்தரணி பொ. கணபதிப்பிள்ளை (நடுவில்) - மரகதவல்லி தம்பதியரின் அருமைப் புத்திரியும் காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன் (இளைப் பாறிய ஆசிரியர், முன்னாள் தலைவர் - உடுப்பிட்டி கிராமசபை)- சௌந்தரிபிள்ளை தம்பதியரின் அருமை மகளும் மாணிக்கவாசகரின் (Managing Director, Curray Ltd., Lusaka, Zambia, முன்னாள் பிரதம கணக்காளர்- கிழக்கிலங்கை கடதாசி கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும் சஞ்சீவ், (Operational Manager, Microlink Ltd., Zambia), காலஞ்சென்ற பிரதீவ், பிரியங்கா ஷாலினி ஆகியோரின் அருமைத்தாயும் Dr.வைகுந்தனின் (Teaching Hospital, Kegalle), மாமியும் மகேஸ்வரி (புவனி), சங்கரகுமாரனின் (கண்டி) அருமை பெறாமகளும் மகாதேவா (பிரசித்த நொத்தாரிசு), மகேந்திரன் (MS Accounting Systems), காலஞ்சென்ற சட்டத்தரணி சரோஞானபண்டிதன், கௌரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் திரிவேணி (Ladies College, Colombo 7), சாரதா (SLANA), Dr.கேதீஸ்வரநாதன் (MOH, Dehiwela - Mt.Lavinia), காலஞ்சென்ற பரமேஸ்வரி சண்முகலிங்கம், சுப்பிரமணியம் (Retired Valuation Inspector), கிருஷ்ணமூர்த்தி, கமலாசனி வல்லிபுரநாதன், ராஜேஸ்வரி சிவயோகசுந்தரம் (USA), ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.12.2006) திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு ஸம்பியாவில் நடைபெறும்.

**Tel.No:00260-1-224807**
**E-Mail : maniks@zamnet.zm.**
**T.P: 5523251, 2554981.**
**P.O.Box 34939,**
**Lusaka, Zambia.**

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு சத்தியநாதன்

எழுதுமட்டுவாழ் வடக்கைச்சேர்ந்த முருகேசு சத்தியநாதன் வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் முருகேசு - நல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் புலோலி தெற்கைச் சேர்ந்த அமரர்களான தங்கத்துரை-நாகரத்தினம் தம்பதியரின் மூத்தமருமகனும் உதயதாரணியின் அன்புக்கணவரும் ஸ்ரீகாந்தனின் பாசமிகு தந்தையும் சிவநாதன், ஜெகநாதன், தவநாதன், சியாமளா, சர்மிளா, மஞ்சுளா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் வரதராசன், கண்ணதாசன், நந்தகுமார், தேவகுமார், ஜெயராணி, சாந்தி, வசந்தா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் மிருசுவில் கொட்டிகையைச் சேர்ந்த அவரது சகோதரர் தவநாதனின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று 17.12.2006 முற்பகல் 9 மணிக்கு புலோலிக்கு எடுத்துச்செல்லப்படும். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2006) ஞாயிற்றுக்கிழமை புலோலி தெற்கில் உள்ள சுண்டாங்கி ஒல்லை ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்துமயானத்திற்கு பிற்பகல் 2 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுண்டாங்கி ஒல்லை ஒழுங்கை,*
*புலோலி தெற்கு.* (58163)
தகவல்: மனைவி, மகன், சகோதரன்

## திருமதி பரமநாதன் ஞானம்பிகை

காரைநகர், ஆலடியைப் பிறப்பிடமாகவும் உடையார் லேன், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானம்பிகை பரமநாதன் (13.12.2006) புதன்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம்பிள்ளை - செல்வராணி தம்பதியரின் அன்பு மகளும் புவனேஸ்வரி, பத்மநாதன், கிருபாகரன், சிறிஸ்கந்தராசா, ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் செ. குணபாலசிங்கம், சிவபாக்கியம், ஜெயசுந்தரி, சாந்தகுமார் ஆகியோரின் மைத்துனியும் சியாமளா, மஞ்சுளா, செந்தூரன், தயந்தன், ஜெனந்தி, தி.பிரபாசினி, தி.தியோ ஆகியோரின் மாமியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடையார்லேன்,*
*கொக்குவில்.* (58159)
தகவல்: திருமதி. செ. வேலாயுதம்பிள்ளை

## பொன்னையா மார்க்கண்டு

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா மார்க்கண்டு நேற்று (16.12.2006) சனிக்கிழமை காலமானார். அன்னார் பொன்னையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரனும் அன்னலட்சுமியின் (சின்னப்பிள்ளை) அன்புக் கணவரும் சிவஞானவதி (நிலா), சிவகுமார், சிவானந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசரத்தினம், சாந்தினி, சிவகுமார் ஆகியோரின் மாமனும் ஜனார்த்தன், ஜனகோசன், ஜலதாரணி, ஜெயகபில், ஆரணன், அனார்த்தன், அனு. லாவண்யா, லவின் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற சிவபாக்கியம், வள்ளிப்பிள்ளை, தபால் ஊழியர் சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 185, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள மருமகன் இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 2மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ச.இராசரத்தினம் (மருமகன்).

## கதிரேசு மாணிக்கம்

[ஓய்வு பெற்ற புகையிரத ஊழியர்]

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு மாணிக்கம் 15.12.2006 வெள்ளிக்கிழமை மாலை காலமானார். அன்னார் காலஞ்சென்ற கதிரேசு - சின்னக்குட்டி தம்பதியரின் மகனும் சின்னத்தம்பி - சிவகாமி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற ஆச்சிப்பிள்ளையின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற வல்லிபுரம், இரத்தினம், துரைசிங்கம் மற்றும் அன்னபாக்கியம், சுப்பிரமணியம், சிந்தாமணி ஆகியோரின் சகோதரரும் ஆனந்தராஜா, தேவுனுராஜா, மஞ்சுளா, சறோஜா, சுமதி, மனோ, சிறிகாந்தன், சிவகுமார் ஆகியோரின் அன்புத்தந்தையும் சறோஜா, ராஜினி, அமரர் கணேசலிங்கம், தர்மலிங்கம், கருணாநிதி, பகீரதரூபி, பார்பரா, மைத்திரேகி ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2006) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியை வேம்பிராய் இந்து மாயானத்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் கிழக்கு, மட்டுவில்.
தகவல்: மஞ்சுளா (மகள்).

## அந்தோனிப்பறுநாந்து அன்ரன்மரியநாயகம்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 33, 6ஆம் குறுக்குத்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பறுநாந்து அன்ரன்மரியநாயகம் காலமானார். அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பறுநாந்து - வெரோணிக்கா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற எட்வீனுப்பிள்ளை - மரியதிரேசா தம்பதியரின் அன்பு மருமகனும் மேரிறோசின் கணவரும் அருட்தந்தை மார்செலியார் (O.M.I), மரியதாஸ் (செட்டி) ஆகியோரின் சகோதரனும் இப்பொலிற், அன்ரன், கிறேஸ், றொபேட் ஆகியோரின் மைத்துனரும் அமல்ராஜ், அமலறோஸ் ஆகியோரின் தந்தையும் அருட்சகோதரி மரியசீலி (திருக்குடும்ப சபை), மரியநாயகி, இயூஜின், அருள்ராஜ், தயானந்தன் ஆகியோரின் சிறிய தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பி.ப 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மண்டைதீவு புனித பேதுருவானவர் சேமக்காலையில் [illegible]

33, 6 ஆம் குறுக்குத் தெரு,
[illegible]
தகவல்: மனைவி.

# கண்ணீர் அஞ்சலி

லக்ஷ்மி ஓகனைஷேசன் முன்னாள் முகாமையாளர்

## அமரர் கந்தையா சிவலிங்கம்



அவர்களின் திடீர் மறைவையிட்டு அதிர்ச்சியடைந்தோம். அவரது மறைவு எமது நிறுவனத்திற்கு பேரிழப்பாகும். அவரின் இழப்பினால் பெருந்துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

23/1, பிறவுண் வீதி, (4ஆம் ஒழுங்கை),
யாழ்ப்பாணம். (சி-51571)
லக்ஷ்மி ஓகனைஷேசன்,
லக்ஷ்மி ஏஜென்சி,
முகாமையாளரும், ஊழியர்களும்.

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சிவலிங்கம் (J.P)

[இளைப்பாறிய உள்ளகக் கணக்காய்வாளர், சீமெந்து கூட்டுத்தாபனம், லக்ஷ்மி ஒகனைஷேசன், BATA மொத்த விற்பனை நிலைய முகாமையாளர், யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தலைவர்]



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவலிங்கம் (J.P) 14.12.2006 வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா - அன்னரத்தினம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் சீவரெத்தினம் - ஜெயமணி (UK) தம்பதியரின் அன்பு மருமகனும் சிவனேசமணியின் அன்புக் கணவரும் குமுதினி (லண்டன்), தர்சன் (கொழும்பு), டினேசன் (O/L மாணவர் கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சதீஸ்கண்ணாவின் (UK) அன்பு மாமனும் கமலாதேவி (UK), காலஞ்சென்ற சிவபாலசிங்கம், சிற்பாலன், சிவனேசன் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வமணி (கொழும்பு), சாந்தினி (UK), சாந்தகுமார் (UK), யோககுமார் (UK) ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*ஏழாலை மேற்கு, ஏழாலை. 0602 212592* மனைவி, பிள்ளைகள், மருமகன்.

## திருமதி முத்துக்குமாரு கண்மணியம்மா

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துக்குமாரு கண்மணியம்மா 15.12.2006 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாருவின் அன்பு மனைவியும் விஜயகுமார் (கனடா, முன்னாள் மாவட்ட முகாமையாளர் வீடமைப்பு அதிகார சபை, முல்லைத்தீவு), ஜெயக்குமார் (அதிபர், தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயம்), செல்வகுமார் (தபால் ஊழியர், கொக்குவில்) சுகுமார் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் தாயும் விமலாதேவி (கனடா), நந்தினி (ஆசிரியை வட்டு. மத்திய கல்லூரி), தமிழ்செல்வி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற மகாலட்சுமி மற்றும் தருமமூர்த்தி, பாஸ்கரமூர்த்தி (மகாலட்சுமி தேநீர் அகம், கொக்குவில்), ஜெயலட்சுமி, Dr. நவலட்சுமி (சித்த ஆயுர் வேத வைத்தியசாலை, கைதடி) ஆகியோரின் பெரியதாயும் சாந்தினி, விஜய லட்சுமி, நடனலிங்கம், நித்தியகுமார் ஆகியோரின் அன்பு மாமியும் சஞ்ஜித்குமார், சுஜந்தகுமார், டிலானி, துளசிகா, லக்ஷிகா, நிரோஜ்குமார், தரண்யா, திவ்வியா, கஜீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சேச்லேன்,
கொக்குவில் கிழக்கு. (56941)
ஜெயக்குமார், செல்வக்குமார், சுகுமார் (பிள்ளைகள்).

## சின்னத்தம்பி இரத்தினசிங்கம் (சின்னராசா)



உடுவில் தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி இரத்தினசிங்கம் 14.12.2006 வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஞானேஸ்வரியின் அன்புக்கணவரும் பாஸ்கரன் (லண்டன்), சுரேஸ்கரன் (Lankam- Ceylon Ltd.), ரமேஸ்கரன் (விஞ்ஞான பீட இறுதி வருடம், யாழ்.பல்கலைக்கழகம்), சதீஸ்கரன் (பொறியியற்பீடம் இறுதி வருடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), யானகி (ஆசிரியை, வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வ கஜேந்தினியின் (லண்டன்) அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான கனக சுந்தரம், நடராசா, நாகேஸ்வரி, சேனாதிராசா மற்றும் அருமைத்துரை, செல்வ ரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2006) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் தெற்கு, யாமா சந்தி,
மானிப்பாய். (58154)
தகவல்:
ஞானேஸ்வரி (மனைவி).
சி.அருமைத்துரை (சகோதரன்),

## குட்டியர் பூலோகநாதன்

புத்தூர் (அம்பொடை), குமாரசாமி வீதியைப் பிறப்பிடமாகவும், புறாப்பொறுக்கி, ஆலடிச்சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட குட்டியர் பூலோகநாதன் நேற்று (16.12.2006) சனிக்கிழமை அதிகாலை காலமானார். அன்னார் இராசம்மாவின் அன்புக்கணவரும் நடனரூபன் (லண்டன், கொம்பியூட்டர் எஞ்ஜினியர்), தயாபரன் (கொழும்பு வருமானவரி காரியாலயம்), மயூரம் (கொழும்பு), பகீரதன் (பிரான்ஸ்), ஊர்மிளா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சின்னத்தம்பி (இரத்தினம்), அமரர் மகாதேவன், சி.பார்வதி, ஆ.பூமணி ஆகியோரின் மைத்துனரும் சிவகுருநாதன், ஆறுமுகம் ஆகியோரின் சகலனும் ராஜரட்ணம், கமலா ஆகியோரின் சிறிய தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலடி, புறாப்பொறுக்கி,
கரவெட்டி.
தகவல்: வ.சின்னத்தம்பி (இரத்தினம்-மைத்துனர்).

## திருமதி சண்முகதாசன் இராசலட்சுமி



கொட்டுடை முருகமூர்த்தி கோயில், துணவி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சண்முகநாதன் இராஜலட்சுமி நேற்று (16.12.2006) சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற சண்முகதாசனின் (ஓவசியர், நீர்ப்பாசண இலாகா) மனைவியும் காலஞ்சென்ற நாகலிங்கம் - பிள்ளைமுத்து தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் மருமகளும் சரோஜினிதேவி (ஆசிரியை, வட்டு. மத்திய கல்லூரி), சாந்தா, சிவபாலன் (தேசிய நீர் வழங்கல் சபை, ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்புத் தாயும் இரத்தினம்மா, காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் புவனேஸ்வரன் (காரைநகர்), மங்களேஸ்வரி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், தெல்லிப்பழை பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்பு மாமியும் பவிதா, அபீரனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2006) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துணவி, வட்டுக்கோட்டை. (58162)
தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கத்துக்கு அஞ்சலி செலுத்தும் பல இதயங்கள்



யாழ்ப்பாணம்,டிசெ.17

**'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கத்துக்கு பல்வேறு அமைப்புகள் மற்றும் அரசியல் பிரமுகர்களும் அஞ்சலி தெரிவித்து செய்திகளை விடுத்துள்ளனர்.**

அவற்றில் சில வருமாறு:-

**போராட்ட நியாயத்தை சர்வதேசத்துக்கு காட்டினார் - கா.வே.பாலகுமாரன்**

விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் கா.வே. பாலகுமாரனின் செய்தி.

பாலா அண்ணா அவர்களின் இழப்பு எங்கள் எல்லோரையும் ஆறாத சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அவருடைய இழப்பை எங்களால் நம்பமுடியவில்லை. அவரைப் பற்றிக் கதைப்பதென்பது தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றிக் கதைப்பதென்பதாகும்.

பாலா அண்ணா தனிமனிதனாக நின்று விடுதலைப் போராட்டத்தின் நியாயங்களைத் தெளிவான முறையில் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் சென்றவர். அவருடைய இதயம் எங்கள் எல்லோருக்கும் அறிவாலயமாக இருந்தது.

போராளிகளுக்கும், அறிஞர்களுக்கும், அறிவாளிகளுக்கும், மக்களுக்கும் அடைக்கலம் கொடுக்கின்ற ஓர் இடமாக பாலா அண்ணா இருந்துள்ளார். ஓர் அற்புதமான மனிதனை நாம் இன்று இழந்துள்ளோம்.

எங்களுடைய ஊடகத்துறையை வளர்க்க வேண்டுமென்று நெடுநாளாக அதற்காகப் பாடுபட்டவர். விடுதலைப் போராட்டம் பற்றிய ஆழமான கருத்துகளை ஊடகங்கள் ஊடாக உலகத்திற்கு எடுத்துச் சொல்லும் ஒரு மனிதனாகவும் இருந்து செயற்பட்டவர். இவருடைய இழப்பு எங்கள் எல்லோரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்தச் சோகத்தில் மூழ்கிப்போகாமல் அந்த பாலா அண்ணாவின் கனவை தமிழ் மக்களாகிய நாங்கள் எல்லோரும் இணைந்து நனவாக்கவேண்டும் என இந்நாளில் உறுதி எடுத்துக்கொள்வோம்.

**முஸ்லிம்களின் குரலை ஆர்வத்துடன் செவிமடுத்தவர் - ஹக்கீம்**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் விடுத்த அறிக்கை வருமாறு.

மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் இயற்கை எய்தியமையையிட்டு எனது ஆழ்ந்த அனுதாபங்களை, அன்னாரது மனைவி அடேல் பாலசிங்கத்திற்கும்,வரது அரசியல் நண்பர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர் சிறந்த புத்திஜீவியாகவும், இடதுசாரிச் சிந்தனைகளால் வடித்தெடுக்கப்பட்ட தத்துவ வித்தகராகவும், ஜாக்கிரதையான பேரப் பேச்சாளராகவும், இராஜதந்திரியாகவும், தமிழ்த் தேசியவாதியாகவும் திகழ்ந்த பன்முகத்தன்மையைக் கொண்ட புலமையாளராவார்.

கடந்த மூன்று தசாப்த காலத்துக்கு மேலாக இலங்கை அரசியலில் தமிழ்த் தேசிய அரங்கத்திற்கு ஒளியூட்டிய இவர், தமிழர் தரப்பு நியாயங்களையும் அபிலாஷைகளையும் சர்வதேச அரங்கில் பிரகாசிக்கச் செய்தவராவார்.

வடக்கு முஸ்லிம்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டமையை வரலாற்றுத் தவறு என்று ஒப்புக்கொண்ட, பாலசிங்கம் அதற்காக மனம் வருந்தி முதலாவதாக மன்னிப்புக் கோரிய புலிகள் தரப்பு பிரமுகருமாவார்.

2002ஆ ஆண்டு செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பெறுபேறான ஆறு சுற்றுப் பேச்சுகளின்போது நான் இவருடன் முஸ்லிம்களின் உரிமைகள், அரசியல் அபிலாஷைகள் சம்பந்தமாக பேச்சு மேசையிலும், மேசைக்கு வெளியிலும் வாதிட்டிருக்கிறேன்; நட்புடன் உரையாடியும் இருக்கிறேன். இந்த அனுபவத்தின் ஊடாக முஸ்லிம்களின் குரலை ஆர்வத்துடன் செவிமடுத்த தமிழ்த் தேசத்தின் காதுகளாகவே மறைந்த அன்ரன் பாலசிங்கத்தின் ஆன்மாவை நான் கண்டேன். அவர் முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தமையை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

எனது தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழு, பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகளின் குழுவை கிளிநொச்சியில் சந்தித்துப் பேசிய போது பாலசிங்கமும் உடனிருந்தார்.

இவ்வேளை முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகளும், இருப்பும், பாதுகாப்பும் பற்றி அன்றைய சூழல் நிலைக்கு ஏற்ப நாங்கள் எடுத்துக் கூறியபோது கருத்துக்களை முழுமையாக உள்வாங்கிக்கொண்ட இவர் வடக்கு-கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் தாயகம் என்பதைத் திடமாக இவ்விடத்தில் உரைத்தார்.

இக்கூடலின் இறுதியில் முஸ்லிம் காங்கிரஸும் தமிழீழ விடுதலைப் புலிகளும் கூட்டு அறிக்கையொன்றைத் தயாரித்தன. இதில் நானும் பிரபாகரனும் கையெழுத்திட்டோம். இந்த உடன்பாட்டைத் தெளிவான பார்வையுடன் அங்கீகரித்த பாலசிங்கம் அவர்கள் சமத்துவத்தை நேசித்த, அரசியல் தத்துவ ஞானியாக அவ்விடத்தில் மிளிர்ந்தார்.

எதிர்காலப் பேச்சுகளில் பேரகலமாய் ஏற்பட்டிருக்கும் இவரது இல்லாமை என்ற இடைவெளி தமிழ்த் தேசத்திற்குப் பேரிழப்பாகும். இவ்வாறே சமாதானத்தையும், பேச்சின் மூலமான இனப்பிரச்சினைத் தீர்வையும் விரும்புகின்ற அனைத்துச் சக்திகளுக்கும் இவரது மறைவு கவலையையும், வேதனையையும் தருவதாகும்.

இந்தவகையில் இன்றும் சமாதானத்தையும், சமத்துவமான பேச்சுத் தீர்வையும் விரும்புகின்ற நாமும் இவரது மறைவையொட்டி அனுதாபங்களையும், கவலையையும் வெளிப்படுத்திக் கொள்கிறோம்.

**புரட்சிப் போராளி - இடதுசாரி முன்னணி**

இடதுசாரி முன்னணியின் இரங்கல் செய்தி.

கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை முதன் முதலாக நாம் 1978இல் லண்டனில் சந்தித்தோம். இச்சந்திப்பு ஒரு பேரணியில் கலந்துகொண்டபோதே ஏற்பட்டது. எம்முடன் மிக நட்பாகப் பழகிய அன்ரன் பாலசிங்கம் எம்மை தமது வீட்டுக்கு அழைத்திருந்தார். நாம் அவரது வீட்டுக்குச் சென்றபோது எமக்கு விருந்து வழங்கியதுடன் தமிழ்த்தேசிய பார்வையுடைய சுயநிர்ணய உரிமை தொடர்பான ஆவணத்தையும் எமக்கு அவர் வழங்கினார்.

இவரின் செயற்பாடுகள் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு தமிழ் மக்கள் மத்தியில் மிகப்பெரிய வளர்ச்சியைப் பெற்றுக்கொடுத்தன. கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஒரு புரட்சிகர தமிழ்த்தேசியவாதி ஆவார்.

தனது செயற்பாட்டின் மூலம் தமிழ் மக்கள் மத்தியில் தலைமை நிலைக்கு வளர்ந்தார். இத்தகைய வளர்ச்சி அவரின் தொடர்ச்சியான செயற்பாட்டின் மூலம் ஏற்பட்டதாகும். ஒரு புரட்சிகர கட்சியை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற நாம் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தமிழ் மக்களின் ஒடுக்குமுறைக்கு எதிராக போராடிய போராளி என அழைக்கின்றோம்.

**போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தவர் - இரா. சம்பந்தன்**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனின் செய்தி.

தமிழ்த் தேசிய இனத்துடைய அரசியல் போராட்டத்தில் அதிமுக்கியமான ஒரு காலகட்டத்தில் திருவாளர் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் மறைவு தமிழ் மக்கள் மத்தியில் ஆழ்ந்த துக்கத்தை ஏற்படுத்துகிறது.

பல தசாப்தங்களாக தமிழ்த் தேசியப் போராட்டம் வன்முறையின்றி அஹிம்சை வழியில் இடம்பெற்றது. தமிழ்த் தேசியப் பிரச்சினை சமாதான முறையில் தீர்க்கப்படாமை, ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்படுவதற்குத் தவிர்க்க முடியாத காரணமாக அமைந்தது. இந்தப் போராட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முன்னணி வகித்தது.

திருவாளர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தத்துவ ஆசிரியராகவும், அரசியல் நிபுணத்துவ ஆலோசகராகவும் திகழ்ந்தார். விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற பேச்சுகளில் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி முக்கிய பங்காளராகவிருந்தார்.

இலங்கை அரசினால் தமிழ் மக்கள்மீது முழுமையாகவும், தொடராகவும் விதிக்கப்பட்ட சமமின்மையையும், அநீதிகளையும் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நன்றாக புரிந்திருந்தார். தமிழ் மக்கள் சாத்வீக ரீதியாக நடத்திய போராட்டங்களின்போது, அவர்கள்மீது ஒட்டுமொத்தமாக கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறைகளையும் வன்முறைகளையும் நன்கு அறிந்திருந்தார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள், இலக்குகள் சம்பந்தமாக அவருக்குத் தெளிவான விளக் கம் இருந்தது. இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக தமிழ் மக்கள் சார்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட வகையில் கருத்துகளை முன்வைக்கும் வல்லமையை பாலசிங்கம் அவர்கள் முழுமையாகப் பெற்றிருந்தார்.

தமிழ் மக்களின் நியாயபூர்வமான, அபிலாஷைகளையும் இலக்குகளையும் அடைவதற்கு நடத்தப்பட்ட அரசியல் போராட்டங்களுக்கு பாலசிங்கம் அவர்கள் மிகப் பிரயோசனமும், பெறுமதிமிக்கதுமான பங்களிப்பைச் செய்தார் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள்.

அவருடைய இழப்பு இச்சந்தர்ப்பத்தில் ஒரு பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர் தொடர்ந்து தமிழ் மக்களுக்கு சேவை புரிந்திருக்கவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

அன்னாரின் அன்புத் துணைவி திருமதி அடேல் பாலசிங்கம் அவர்கள், ஒவ்வொரு விதத்திலும் அவருக்கு உதவும் சக்தியாகத் திகழ்ந்தார். திருமதி அடேல் பாலசிங்கம் அவர்களுக்கும், அன்னாரின் மறைவினால் துயரமுற்றிருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**தமிழர் வரலாற்றில் அவர் நாமம் நிலைத்திருக்கும் - பெ.சந்திரசேகரன்**

மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் விடுத்த செய்தி.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் மறைந்த செய்தி கேட்டு மலையக மக்கள் முன்னணி அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளது.

சிறுபான்மை தமிழ் மக்களின் போராட்டத்தில் அவர் ஆற்றிய பங்களிப்பு வியக்கத்தக்கது. இது தமிழீழ விடுதலைப் புலிகளின் கருத்துகளை எவ்வளவு ஆணித்தரமாக உலகுக்கு எடுத்துச்சொன்னாரோ அதேவிதமாக அரசுக்கும் ஒரு பாலமாக இருந்து செயற்பட்டிருக்கிறார்.

அவரின் வெற்றிடம் யாராலும் நிரப்பப்படமுடியாதது. சிறுபான்மை தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் அவரின் நாமம் அசைக்க முடியாமல் நின்று நிலைத்திருக்கும்.

**தமிழ் மாணவர் ஒன்றியத்தின் யாழ். மாவட்ட பிரிவு விடுத்த செய்தி**

தாயக விடுதலைப் பயணம் கரடு முரடான பாதைகளைக் கடந்து தன் முடிவினைக் காணும் தறுவாயில் நிற்கின்றது. இலட்சியம் குன்றிடாத இலட்சிய புருசர்களை இழந்த தாயக தேசத்திற்கு, சோகங்களையும் துயரங்களையும் தாங்கி விடுதலையை வென்றெடுக்கும் வீறாப்புமிக்க உணர்வோடு வாழும் தமிழ் மக்களுக்கு பேரிடியாய், பேரிழப்பாய் அமைந்திருக்கின்றது - கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் மறைவு.

தமிழ் மக்கள் பேரினவாத சக்திகளால் அடக்கி ஒடுக்கப்பட்டபோது, இனவாதப் பேய்களின் கைகளில் தமிழ் மக்களின் குரல் - வளைகள் அகப்பட்ட போது புறப்பட்டெழுந்த தியாகத் தன்மை மிக்க விடுதலை வேள்வியின் நாயகன் - தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு உயிர் தோழனாக நின்று உன்னதப் பணியாற்றிய பாலசிங்கத்தின் இழப்பு எவராலும் தாங்கிக் கொள்ளமுடியாது.

அன்னாரின் இழப்பென்பது ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு; தாங்கமுடியாத சோகத்தைத் தந்த வீரச்சாவு நிகழ்வு. மாணவர்களாகிய நாம் தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஐயா அவர்கட்கு எமது இதய அஞ்சலிகளைத் தெரிவிப்பதோடு அவரின் பாதையில், பயணத்தை தொடர உறுதி எடுத்துக்கொள்கின்றோம்.

**சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் செய்தி**

தமிழினத்தின் விடியலுக்காய் வீறுகொண்டெழுந்த விடுதலைப் போராட்ட வரலாற்றிலே தனக்கென ஓர் இடம்பிடித்து தேசமெங்கும் எதிரொலித்த ஒரு குரல் ஓய்ந்து விட்டது.

சிறந்த கல்வியலாளனும், தத்துவ ஆசிரியரும், அரசியல் ஆலோசகராகவும் திகழ்ந்த 'தேசத்தின் குரல்' கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தமிழ்த்தாய் மூச்சோடு இரண்டறக் கலந்துவிட்டார். மூன்று தசாப்தகால விடுதலைப் போராட்ட வரலாற்றிலே விடுதலையை வீச்சாக்கக்கூடிய வகையிலும், விரைவுபடுத்தும் வகையிலும், தேசியத் தலைவருக்கு உற்ற தோழனாகவும், விடுதலைப் போராட்டத்துக்கு வழிகாட்டியாகவும், தமிழரின் உரிமைக்காக குரல் கொடுத்த உத்தமராகவும் திகழ்ந்தவர் 'தேசத்தின் குரல்' கலாநிதி அன்ரன் பாலசிங்கம்.

தனது உடல் வலுக்குன்றிய போதும் உளவலுக்குன்றாது தனது இறுதி மூச்சுள்ளவரை தமிழ்த் தேசியத்துக்காக குரல் கொடுத்தவர். இவரின் அரசியல் சாணக்கியமும், அறிவுத் திறனும், பேச்சுவன்மையும் எமது விடுதலைப் போரை சர்வதேச அரங்கில் கொண்டு சென்றது. இதனை அவரது கடந்தகால அரசியல் பேச்சுவார்த்தை மூலம் தெரிந்து கொள்ளலாம்.

அன்ரன் பாலசிங்கம் ஓர் அரசியல் ஆய்வாளராக மட்டுமன்றி சிறந்த வரலாற்று ஆசிரியருமாவார். தமிழ் தேசிய வரலாற்றை, அவ் விடுதலைப் போராட்டம் கருக்கொண்டு, உருக்கொண்டு வளம்பெற்றதை, அதன் நியாயப்பாடுகளை 'விடுதலை', 'போரும் சமாதானமும்' வரலாற்று நூல்கள் மூலம் உலகறியச்செய்து அதனை விடுதலைப் போராட்ட வரலாறாகவும் ஆவணப்படுத்தினார். அன்னாரது இழப்பானது ஒரு குடும்பத்துக்கோ அல்லது ஒரு தனி நபருக்கோ ஏற்பட்ட ஒன்றல்ல. ஒட்டுமொத்த தமிழ் இனத்துக்கும் ஏற்பட்ட பேரிழப்பு. அன்னாரது தேசத்தின் பணிக்காகவும் அவரது விடுதலை வேட்கைக்காகவும் எமது தேசியத் தலைவர் 'தேசத்தின்குரல்' என்ற கௌரவப் பட்டம் வழங்கி கௌரவித்துள்ளமை அன்னாரது பெருமையை பறைசாற்றியுள்ளது. அன்னாரது இழப்பு ஈடுசெய்யமுடியாத ஒன்று. அன்னாரது இழப்பால் துயருறும் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# ஈழப் போராட்டக் களத்தில் ஒரு மாமலை சரிந்தது!

## சென்னை தமிழ்ப்படைப்பாளிகள் கழகம்

சென்னை, டிச. 17

தமிழீழ விடுதலைப் போராட்டக் களத்தில் ஒரு மலை சரிந்துவிட்டது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் மறைவு குறித்து தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் நீண்டகால அரசியல் மதியுரைஞரும், கொள்கை வகுப்பாளரும், அரச தந்திரியும் ஆன அன்ரன் பாலசிங்கம் அவர்களின் மறைவு கேட்டு மீளாத் துயர் அடைகிறோம். அவர் கொடிய நோயினால் படுக்கையில் வீழ்ந்திருந்தாலும் அவர் இன்னும் சிறிது காலம் உயிர் வாழ்வார் என்று நம்பியிருந்தோம். அந்த நம்பிக்கை பொய்த்துவிட்டது.

பாலசிங்கம் 30 ஆண்டுகாலத்துக்கு மேலாக தமிழீழ விடுதலைப் போராட்டக் களத்தில் கொள்கைப் பற்றோடும் நெஞ்சுறுதியோடும் மலைபோல உயர்ந்து நின்ற ஆயுதம் ஏந்தாத போராளி ஆவார்.

திம்பு முதல் ஜெனிவா வரை நடந்த அமைதிப் பேச்சுவார்த்தைகள் அனைத்திலும் தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பாகக் கலந்துகொண்டு தமிழ்மக்களது பக்கம் உள்ள நியாயத்தை எடுத்துக்காட்டி வழக்குரைத்தவர்.

அண்மையில் பேராசிரியர் எச்.எல்.பீரீஸ் பேசும்போது, பாலசிங்கத்தின் இழப்பு தமிழர்களைவிட சிங்களவர்களுக்குப் பெரிய இழப்பாக இருக்கும் எனக் கூறினார். விடுதலை பெற்ற தமிழீழ நாட்டின் வரலாறு எழுதப்படும்போது அவருக்கு ஒரு அத்தியாயம் ஒதுக்கப்படும் என்பது திண்ணம் - என்றுள்ளது.

# குடாநாட்டு விளை பொருள்களை கொழும்புக்கு அனுப்ப நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.17

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் விளை பொருள்களை கொழும்புக்கு கப்பல் மூலம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் புகையிலை, வெங்காயம், முந்திரிகைப்பழம் போன்றவற்றை கப்பல்மூலம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் -

இந்தப் பொருள்களை உற்பத்தி செய்வோர் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவுடன் தொடர்பு கொள்ளும்படியும் அரச அதிபர் கே.கணேஷ் உதயனுக்குத் தெரிவித்தார்.

அனுப்பவிரும்பும் பொருள்களின் விவரம், அனுப்புபவரின் பெயர், விலாசம், கொழும்பில் பொருள்களைப் பெறுபவரின் பெயர், விலாசம் ஆகியவற்றுடன் மேற்படி பொருள்களை அனுப்ப விரும்புவோரை புனர்வாழ்வுப் பிரிவுக்கு வந்து பதிவுசெய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மண் மகிழ 18 * 10 * 1947



கண் நெகிழ 18 * 11 * 2006

### அமரர் மாணிக்கம் சுந்தரலிங்கம்

(இளைப்பாறிய ஊழியர், காசநோய் வைத்தியசாலை, மயிலிட்டி)

பண்பிலே தெய்வமாய் பாசத்தின் நெடுவேராய்
கண்ணின் மணியாக எமை காத்திருந்த தந்தையே!
மண்ணில் நின்னுருவம் மறைந்தாலும் - நெடுநாளாய்
விண்ணுலகின் விருந்தாக விட்டிருக்கிறோம் என்றும்.

எமது அன்புத் தலைவரின் பிரிவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து எம் துயரில் தாமும் பங்கு கொண்டு பல்வேறு வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதோடு, நாளை (18.12.2006) திங்கட்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'உதயதாரகை', ஆனந்தா வீதி,
மானிப்பாய்.
(சி/51539)

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

## ஓராம் ஆண்டு நினைவலைகளில்...

அன்னையின் மடியில் 18 * 12 * 1955



ஆண்டவன் அடியில் 17 * 12 * 2005

### அமரர் கதிர்காமு முருகேசு(சிவபாதம்)

ஆண்டு ஒன்று ஆனதையா! - உன்
ஆருயிர் பிரிந்து சென்று
தம்பி என்று நாமழைக்க - இத்
தரணியிலே நீயில்லை
பாசமாய் நீ வளர்த்தாய் - உன் மருமகன்
பட்டம் பெற்று நிற்கின்றான்
பேச வார்த்தையின்றி பேதையர்
நாம் தவிக்கின்றோம்.
இயற்கை உன்னை பிரித்தாலும் - எம்
இதயமெல்லாம் உன் நினைவில் நிறைந்திருக்கும்.

குடும்பத்தினர், தாய், மனைவி, சகோதரிமார்,
மருமகன், பேரமகன், அண்ணன்மார்,
மச்சான்மார், மச்சாள்மார், மருமக்கள், பேரமக்கள்.

நாகர் கோயில் கிழக்கு,
நாகர் கோயில்.
(சி/51540)

## வீட்டுக் கிருத்திய அழைப்பு

திருமதி
நகுலேஸ்வரி இராகவன்
(B.A. Dip. in Education)
(சிரேஷ்ட ஆசிரியை,
இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்)
மறைவு
16 * 11 * 2006

திதி: அபரபக்க ஏகாதசி



"எமை மறந்து நீ எங்கேதான் போனாயோ?
நினைவிழந்து துடிக்கின்றோம் மீண்டுவர மாட்டாயா?
மாதம் ஒன்றென்ன ஓராயிரம் ஆண்டானாலும்
உம் நினைவு எம் மனதில் என்றென்றும் நீங்காது."

எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்தியம் இன்று (17.12.2006) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அக்குருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அமரரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பலவாணர் பாதை,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (56753)

க.இராகவன் (கணவர்),
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 18 * 03 * 1925



மறைவு 17 * 11 * 2006

### அமரர் வேலுப்பிள்ளை தங்கராஜா

(ஓய்வுபெற்ற M.L.T.)

கடந்த 17.11.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (17.12.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பத்தமேனி,
அச்சுவேலி.
(56898)

- குடும்பத்தினர்.

### ஸ்தோத்திர ஆராதனை

சுன்னாகம் அசெம்பிளி ஒவ் கோட்டின் 21 ஆவது வருட ஸ்தோத்திர ஆராதனை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சபையில் நடைபெற உள்ளது. (202)

A/L 2007, 08
Phy. - Mr. எர்வின்
Che. - Mr.ஜெயந்தன்
C/ma. - Mr.ஜெயக்குமார்
Bio - Mr. K.G.அன்ரன்
SHAMROCK
1/கச்சேரி நல்லூர் வீதி.
(56918)

### பிருந்தா மில்ஸ்

எமது நிறுவனத்தில் பின்வரும் சேவைகள் வழமைபோல் நடைபெறுகின்றன.
1. அரைக்கும் ஆலை
i. சுத்த அரிசி திரிக்கு மைதமும் கொடுக்கப்படும்.
ii. அனைத்து வகையான அரைப்பு வேலைகள் (56897)
2. சுத்திகரிப்பு நிலையம்
i. மோட்டார் சைக்கிள் சுத்திகரிப்பு 250/-
தொடர்பு: பிருந்தா மில்ஸ்,
No.18, நக்கா ரோட், யாழ்ப்பாணம். Tele.: 9201

### மணமகள் தேவை

அரச வங்கியொன்றில் பணிபுரியும் முப்பது வயதுடைய உத்தியோகத்தருக்கு மணமகள் தேவை. யாழ். இந்து, சதய நட்சத்திரம், செவ்வாய்க்குற்றமற்றவர், மொத்த கிரகபாவம் மூன்றேமுக்கால்.
(56853) விளம்பர இல. 2938
C/o உதயன், யாழ்ப்பாணம்.

### கொழும்பு, யாழ். - யாழ்., கொழும்பு விமான சேவை

தொடர்பு: 078 6059885
0777 733662
021 222 3143
021 222 2874
(56908)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கந்தையா சிவலிங்கம் அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு நாங்கள் அதிர்ச்சியும் கவலையும் அடைந்தோம். இதனால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா.மா.பு.நெ.கூ. சங்க பணிப்பாளர்,
பணியாளர்கள்.
(56930)
கோண்டாவில்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



17.11.2006 அன்று இறைபதமடைந்த எமது கழக நண்பன் **கு.வசீகரன்** அவர்களின் அன்புத் தந்தை

**சந்திரசேகரம்பிள்ளை குலசிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்,
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம். (56915)

### பிரதி மாகாணப் பணிப்பாளர் சுகாதார சேவைகள் யாழ்ப்பாணம்

### கேள்வி அறிவித்தல்

வாகன தரிப்பிடம் அமைத்தல் UBIC

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பிரதி மாகாணப் பணிப்பாளர் சுகாதார சேவைகள் அலுவலகத்தில் வாகனத் தரிப்பிடம் அமைப்பதற்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்த கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்புவோர் படிவக் கட்டணமாக 250/-வும் பிணைப்பணமாக 1,500/-வும் செலுத்தி கேள்விப் படிவங்களை எதிர்வரும் 26.12.2006 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிவரை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட கேள்விகள் யாவும் 27.12.2006 புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு முன்பாக உரிய கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படவேண்டும். கேள்விகள் உடன் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,
பிரதி மாகாணப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள்,
யாழ்ப்பாணம்.
[illegible].2006

## கண்ணீர் அஞ்சலி

Dr.திருமதி நாகேந்திரா அவர்களின் சகோதரி
திருமதி தெய்வானைப்பிள்ளை செல்வராசா
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அன்னாரது ஆத்மாசாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

வனிக்கா மெடிக்கல்ஸ்
உரிமையாளரும், ஊழியர்களும்.
யாழ்ப்பாணம். (56910)

### நீங்களும் விண்ணப்பிக்கலாம்

உளசமூக மேம்பாடு மற்றும் உளத்துணை தொடர்பான மூன்றாம் பிரிவு கற்கை நெறிக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எதிர்பார்க்கப்படும் கல்வித் தகைமை: க.பொ.த. (உ/த)
பயிற்சிக்காலம்: 12 மாதம் (ஒரு வருடம்)

விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும். வாரத்தில் ஒருநாள் கள வேலைகளும் செய்முறைப் பயிற்சியும் இடம்பெறும். மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்ப முடிவுதிகதி: 30.12.2006

விண்ணப்பங்களைத் தபாலிலோ, நேரடியாகவோ அனுப்பலாம்.
இணைப்பாளர், (56903)
விழி உளசமூக மேம்பாட்டு அமையம்
இல. 40, ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### இலட்சுமணர் பாலகிருஷ்ணன்

(களஞ்சியப் பொறுப்பாளர், இ.போ.ச., கோண்டாவில் சாலை)



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இலட்சுமணர் பாலகிருஷ்ணன் (களஞ்சியப் பொறுப்பாளர், இ.போ.ச., கோண்டாவில் சாலை) அவர்கள் 15.12.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இலட்சுமணர் மற்றும் ஆச்சிப்பிள்ளையின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் மீனாம்பிகை தம்பதியரின் மருமகனும் சுகுணரஞ்சிதமலரின் அன்புக் கணவரும் நிர்மலா, சுரேஸ்குமார் (இ.போ.ச., பருத்தித்துறை), பகீரதன் (இ.போ.ச., காரைநகர் சாலை), உதயகுமார் (பொறியியலாளர்) ஆகியோரின் தந்தையும் கமலினியின் மாமனும் தருக்ஷிகாவின் அன்புப் பேரனும் லலிதாம்பிகை, வரதராஜன் ஆகியோரின் சகோதரனும் பூலோகசிங்கம், பரஞ்சோதி, நவலீலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.12.2006) திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் மேற்கு.
(56928)
தகவல்: தாய், மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### குமாரசிங்கம் கருணாகரசிங்கம் (பத்தர்)



குமாரசிங்கம் கருணாகரசிங்கம் 13.12.06 புதன்கிழமை காலமானார்.

அன்னார் தும்பளையைச் சேர்ந்த காலஞ்சென்ற குமாரசிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் புதல்வரும் திருமதி தியாகராசா பரமேஸ்வரியின் மருமகனும் நாகேஸ்வரியின் கணவரும் அமுதா, அகல்யா, அன்பழகி ஆகியோரின் தந்தையும் கிருஸ்ணவேணி, பரராசசிங்கம், தவமணி ஆகியோரின் சகோதரரும் கமலாதேவி, சரோஜினிதேவி, இராமநாதன், பத்மநாதன், விமலாதேவி, குருநாதன், ஜெயநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லோட்டஸ் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
(56913)
தகவல்: குடும்பத்தினர்.

### ஆறுமுகம் கந்தையா

(ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர்,
Retd. D.R.O. Head Quarters District Secretariat, Jaffna]



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கண்டி வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் நல்லூர், வைமன் வீதியில் வசித்தவருமாகிய ஆறுமுகம் கந்தையா 15.12.2006 அதிகாலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற சதாசிவம் - பராசக்தி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற வள்ளிநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்னம்பலம், செல்லம்மா, லட்சுமிப்பிள்ளை, அன்னப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் குமுதினி, காலஞ்சென்ற நந்தினி, நளாயினி, காலஞ்சென்ற ஸ்ரீகாந்தா, சர்ந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசையா, கிரிதரன், காலஞ்சென்ற நளாயினி, திருநீலகண்டன் ஆகியோரின் மாமனும் துஷ்யந்தன், துஷ்யந்தி, சுதர்சன், குமணரூபன், பிரணவன், கிரிஜா ஆகியோரின் அன்புப் பேரனும் நவீன், திவ்வியா, பிரதிக்கா, டிலானிக்கா, அபிநயா, தீபக் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வைமன் வீதி, நல்லூர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 37/1, வைமன் வீதி, நல்லூர்.
தகவல்:
ப.கிரிதரன் (மருமகன்)
(CONSULTANT ENGINEER)(56906)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்குன்குனியாவிலிருந்து தப்புவது எப்படி?

சிக்குன் குனியா காய்ச்சல் குடாநாட்டிலும் ஏனைய பகுதிகளிலும் காட்டுத் தீ போல் பரவி வருகின்றது. இதன் தாக்கத்தினால் பாதிக்கப்படாத குடும்பமே நாட்டில் இல்லை என்று சொல்லும் அளவுக்கு நிலைமை மோசமாகியுள்ளது. இந்நோயினின்றும் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள பொது மக்கள் போதிய விழிப்புணர்வு பெற்றிருத்தல் அவசியம்.

அண்மையில் தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம் பெற்ற விழிப்புணர்வுச் செயற்பாட்டின்போது கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.யமுனானந்தா மற்றும் சுகாதாரப் பரிசோதகர் பொ.கோபாலவேந்திரன் ஆகியோர் வழங்கிய கருத்துக்கள் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன.

1952ஆம் ஆண்டு தன்சானியா நாட்டில் மிக வேகமாகப் பரவிய அல்பா (Alpha) வகை வைரஸ்களால் ஏற்படுகின்ற காய்ச்சலாக சிக்குன் குனியா (Chikungungiaa) உள்ளது. சிக்கின் குனியா என்ற தன்சானியா மொழியின் பொருள் இருமடங்கான காய்ச்சல் தாக்கத்தை ஏற்படுத்தல் என்பதாகும். இக்காய்ச்சல் ஈடிஸ் (Aedes) வகையான நுளம்புகளால் காவப்படுகின்றது.

## தனிநபர்கள், சமூக அமைப்புகள் கவனிக்க வேண்டிய செயற்பாடுகள்

### சிக்குன்குனியாவின் அறிகுறிகள்

1] உடல் சோர்வு, நோ, தலையிடி, காய்ச்சல் [உடல் வெப்பநிலை 39° C வரை உயர்தல், உடல் வலி]
2] மூட்டுக்களில் நோ - வலி வீக்கம் [மணிக்கட்டு, கணுக்கால், இடுப்பு, கழுத்து, கீழ்ப்புற முதுகு].
3] வாந்தி/வாந்தியெடுக்க வேண்டும் என்ற உணர்வு/ அருவருப்பு ஏற்படல்.
4] தடிப்பான சொறிவு உடலில் ஏற்படல், தோலில் வறட்சி ஏற்படல்.
5] தோலில் சிவப்பு அல்லது ஊதா நிறப் புள்ளிகள் தோன்றுதல். சூரிய ஒளி படுகின்ற இடங்களில் அதிக நிறமூட்டல் ஏற்படல்.

இவ்வாறான அறிகுறிகளுடன் சிக்குன்குனியா காய்ச்சல் ஏற்படுகின்றது. இக் காய்ச்சலுக்கு உரிய வைரஸ் உயிராபத்தை ஏற்படுத்தாது. எனினும் ஆரோக்கியம் குறைந்த கடுமையான இதய - சிறுநீரக - நீரிழிவு நோயாளர்களைத் தாக்குவதால் இறப்புகளும் ஏற்பட்டுவருகின்றன. எனவே, இக் காய்ச்சல் தொடர்பாக அனைவருமே மிகக் கூடுதல் அக்கறை எடுக்கவேண்டும். எச்சரிக்கையாக நடக்கவேண்டும். எவ் வயதினரையும் இந்நோய் தாக்கும் வலுவுள்ளது. இலங்கையில் இந்நோயைத் துல்லியமாகக் கண்டுபிடிக்கக்கூடிய வசதிகளும் இல்லை. மேலும், விசேடமான - தனித்துவமான சிகிச்சை முறைகள் என எதுவும் இல்லாத நிலையும் காணப்படுகின்றது.

### அறிகுறி கண்டவுடன் செய்யவேண்டியது

நோய் அறிகுறிகள் தெரிந்தவுடன் வைத்தியரை அணுகவேண்டும். போசாக்குள்ள உணவுகளையும், விற்றமின்களையும், நீராகாரங்களையும் எடுக்கவேண்டும். நோய்க்காவிகளான ஈடிஸ் நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதாலும் தனிநபர் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிப்பதாலும் இந்நோய் மேலும் பரவாமல் தடுக்கமுடியும். நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவர் கொடுக்கும் மாத்திரைகளைப் பயன்படுத்துவதுடன், போசாக்கு நிறைந்த உணவு, குடிதண்ணீரைப் பருகவேண்டும். நீராகாரங்

**தொகுப்பு: பா.தனபாலன்**

களைக் கூடுதலாக எடுக்கவேண்டும். போசாக்கு குறைபாடு இந்நோயாளர்களைக் கடுமையாகத் தாக்கிவிடும்.

### காவிப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தல்

காவிகள் பெருகுவதைக் கட்டுப்படுத்த பின்வரும் வழிமுறைகளைக் கைக்கொள்ளவேண்டும்.

அ] பாவனைக்குதவாத பொருள்கள், ரயர்கள், பிளாஸ்ரிக், பொலித்தீன்களை எரித்தல்.
ஆ] சிரட்டை, இளநீர்க் கோம்பைகள், தகரப்பேணிகள், நீர் தேங்கி நிற்கும் பொருள்களைப் புதைத்தல்.
இ] கழிவுக் கான்கள், அடைத்த கூரைப் பீலிகள் என்பவற்றில் நீர் தேங்கிநிற்காது அவற்றில் உள்ள குப்பை கூழங்களை அகற்றுதல்.
ஈ] பூச்சாடிகள் மற்றும் நீர்த்தொட்டிகளில் நீர் தேங்கிநிற்காது கவனித்துக்கொள்ளல்.

ஒவ்வொருவரும் தமது வீடு, அயல் பிரதேசங்களைச் சுத்தமாக வைத்திருத்தல், சனசமூக நிலையங்கள், பொது அமைப்புகள், அரச சார்பற்ற பொது அமைப்புகள் என்பன பொது இடங்களை சுத்தமாக வைத்திருக்க புதிய செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். பிராந்திய சுகாதார அதிகாரிகள் உள்ளூராட்சி மன்றங்களின் உதவியுடன் நுளம்புப் புகை அடித்தல் மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். பொதுமக்களும் இதில் ஈடுபடவேண்டும். சிக்குன்குனியா பற்றிய விழிப்புணர்வு எமது பிரதேசத்தில் போதுமானதாக இல்லை. எனவே, ஊடகங்களும் இது தொடர்பாகப் பல பணிகளை ஆற்றவேண்டியுள்ளது. ஒவ்வொரு தனிநபர்களும் பல்வேறு பாதுகாப்பு முறைகளையும் பின்பற்றவேண்டும்.



### தனிநபர் பாதுகாப்பு முறை

1] நுளம்பு வலைகளைப் பயன்படுத்துவதன் மூலம் நுளம்புக் கடியிலிருந்து பாதுகாத்துக் கொள்ளல்.
2] நுளம்புத்திரிகள் பயன்படுத்தல் மூலம் நுளம்புகளைத் தூர விரட்டியடித்தல்.
3] வேப்பிலை போன்ற மூலிகைகளைக் கொண்டு புகையூட்டி நுளம்புகளை விரட்டுதல்.
4] நீளமான காற்சட்டை மற்றும் மேற்சட்டை என்பவற்றை அணிவதன்மூலம் நுளம்பு கடித்தலைத் தடுத்தல்.
5] தைலங்கள் பூசி மின்சாரத்தைப் பயன்படுத்தி நுளம்புகளை விரட்டுதல்.

இவ்வாறாக ஒவ்வொருவரும் பல்வேறு வகைகளில் நுளம்புக் கடியிலிருந்து பாதுகாப்பதன் மூலம் சிக்குன்குனியாவில் இருந்து தப்பமுடியும்.

இந் நோய்த்தொற்று ஏற்பட்டால் போதியளவு ஓய்வு எடுத்துக்கொள்ளவேண்டும். சத்துள்ள நீராகாரங்களை, உணவுகளை உட்கொள்ளவேண்டும். பாடசாலை மற்றும் அலுவலகங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். உடன் வைத்தியரை அணுகி சிகிச்சை பெறுதல் மிக மிக முக்கியமாகும்.

---


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
செல்வி இ.புஸ்பராணி
அவர்களின் சகோதரன்

**அமரர் இளைதம்பி இரத்தினசபாபதி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை,
யா/குரும்பசிட்டி பொன். பரமானந்தர் ம.வி.
ஆசிரியர் கழகம்.
(56932)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 - 03 - 1940
மறைவு 17 - 12 - 2002



**அமரர் கதிர்காமு தங்கம்**

நாள்கள் பல ஓடி நான்காண்டுகள் ஆன போதும்
நீங்காமல் எம்விழியில் நிழலாடுது உன் உருவம்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி [பலாலி].
(56927)
கணவர், பிள்ளைகள், மருமக்கள், சகோதரங்கள், பேரப்பிள்ளைகள்.

## மூன்றாம் ஆண்டு சிராத்ததின அழைப்பு

17.12.2003 அன்று அமரத்துவமடைந்த

**அமரர் பொன்னுத்துரை ஐயாத்துரை (துரைசிங்கம்)**

(இலங்கை சிமெந்து கூட்டுத்தாபன சிறாப்பர்)



அவர்களின் மூன்றாம் ஆண்டு சிரார்த்த தினத்தை முன்னிட்டு அவரின் ஞாபகார்த்தமாக யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜேஸ்வரி (பேச்சி) அம்பாள் ஆலய முன்றிலில் அமைக்கப்பெற்றுள்ளதும் ஈராண்டு பூர்த்தி அடைந்துள்ளதுமான அட்சய சுரபி அன்னதான மண்டபத்தில் இன்று (17.12.2006) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அன்னதானமும் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
315, ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
(56902)
திருமதி யோகம்மா துரைசிங்கம் (மனைவி),
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## தவறிவிட்டது

பாலகிருஷ்ணன் விஜயகௌரி என்பவருடைய தே.அ. அட்டை (778623943V) துட்டகெமுனு சந்தியடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தாரங்கி தொலைத்தொடர்பகம், பலாலி வீதி, திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (56931)

## காணவில்லை


கணபதி மகேந்திரன் என்பவர் கடந்த 10ஆம் திகதி நயினாதீவில் இருந்து காரைநகருக்குப் போனவரை காணவில்லை. வயது 32 மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். இவரைக் கண்டவர்கள் தகவல் தரவும். (56940)
வடக்கு நாரந்தனை (அம்மன் [illegible]) க.கணபதி

## C.B.M

33, கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

வங்கித்துறை வகுப்புகள்
CBF ACBF DBF
வகுப்புகள் ஆரம்பம்
இன்று 17.12.2006 2 p.m.
விவரங்களை DCM [பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்] நிறுவனத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.
T.P. 222 6196 இயக்குநர் N.உமாகாந்த்
(56936)

## நன்றி நவில்தலும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் செல்லப்பா தம்பிப்பிள்ளை**

[முன்னாள் சாரதி, சாவகச்சேரி ப.நோ.கூ.ச.]

17.11.2006அன்று சிவபதம் அடைந்த மீசாலை வடக்கைச் சேர்ந்த எமது குடும்பத் தலைவர் செல்லப்பா தம்பிப்பிள்ளை அவர்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் இன்று (17.12.2006) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கின்றன. இவ் வைபவத்தில் அனைவரையும் கலந்துகொள்ளு[illegible]கின்றோம்.

[illegible] (மனைவி),
கொடிகாமம். (56893) பாலசிங்கம் (மருமகன்).

## சேவை நலன் பாராட்டு



யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் 17 வருடங்கள் சைவ சமய பாட ஆசிரியராக அளப்பெரிய சேவையாற்றி இன்றுடன் ஓய்வுபெறும்

**தம்பிராசா விக்கினேஸ்வரன்**

அவர்களின் அரிய சேவையை உளமார்ந்த நன்றியுடன் பாராட்டி அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகிறோம்.

ஆசிரியர் கழகம்
யா/அச்செழு சைவப்பிரகாச வித்தி. நீர்வேலி.
(56942)

## சேவைநலன் பாராட்டும் 60 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்



இன்று (17.12.2006) ஞாயிற்றுக்கிழமை அகவை அறுபதில் 35வருட சேவையை நிறைவு செய்யும்

**Lion வி.சிவகுமாரன்**

(சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

அவர்களை எல்லாச் சிறப்புகளும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

நிறைவேற்றுப் பொறியியலாளரும், சக உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்
வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பளைப்பிரிவு (பருத்தித்துறை).
(சி/51565)

## பாராட்டு விழா



கொக்குவில் கலாபவன அதிபரும், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளரும் ஆகிய கலைஞானச்சுடர்

**ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன்(SLEAS)**

அவர்களுக்கு 'கலாகீர்த்தி' ஜனாதிபதி விருது கிடைக்கப் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்தும் விழா

காலம்: இன்று (17.12.2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணி
இடம்: யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
வலிகாமம் கல்வி வலய நடன ஆசிரியர்கள்.
(56884)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி.கிழக்குப் பிரதேச சபை, புத்தூர்
## பட வரைஞர்களைப் பதிவுசெய்தல் - 2007

2007ஆம் ஆண்டிற்கான படவரைஞர்களைப் பதிவுசெய்வதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் உரிய ஆவணங்களுடன் 31.12.2006ஆம் திகதிக்கு முன்னர் தலைமை அலுவலகத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

ஏற்கனவே பதிவுசெய்தவர்கள் தமது பதிவினை 31.12.2006ஆம் திகதிக்கு முன்னர் புதுப்பித்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

வலி.கிழக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம், புத்தூர். 14.12.2006

தில்லையம்பல நடராசா
செயலாளர். (சி/51562)

## நீங்களும் விண்ணப்பிக்கலாம்

அலுவலகத்தில் கணனி தட்டச்சு வேலைகளுக்கு லிகிதர் (Clerk) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எதிர்பார்க்கப்படும் தகைமைகள்:
* கல்வித் தகைமை க.பொ.த. (சா/த) * கணனி அனுபவம்
* ரைப்பிங் * ஓரளவு ஆங்கில அறிவு * யாழ். நகரப்பகுதியில் வசித்தல்

சம்பளம்: பேசித்தீர்மானிக்கப்படும்
விண்ணப்ப முடிவுதிகதி: 24.12.2006

விண்ணப்பங்களைத் தபாலிலோ, நேரடியாகவோ அனுப்பலாம்.

அனுப்பவேண்டிய முகவரி:

இணைப்பாளர்,
விழி உளசமூக மேம்பாட்டு அமையம்
இல. 40, ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சிபார்சு செய்யப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்) (56904)

## சிறு விமான சேவை

யாழ். - கொழும்பு விமான சேவைகள்

தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது. உடனடிப் பயணம்.

தொடர்பு:- தொ.பே.: 0112721789, 0114964994, 0785788811, 0785325501.

(சி/50463)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 19 * 08 * 1925

உதிர்வு 30 * 12 * 2002

திருமதி **மங்கையர்க்கரசி நவரத்தினம்**
(கோப்பாய் மத்தி)

*பேரோடும் புகழோடும் பெருமையாய்*
*வாழ்ந்த உங்கள் நினைவுகள்*
*எத்தனை ஆண்டுகள் சென்றாலும்*
*எம் நெஞ்சைவிட்டு மறையாது.*

உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

V.T.S. லேன்,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

(56909)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



ஓட்டுமடத்தைச் சேர்ந்தவர்களும்
217, நாவலர் வீதியில்
வசிப்பவர்களுமாகிய
**குலசிங்கம்** தம்பதிகளின்
சிரேஷ்ட புதல்வி

### செல்வி கிருஷாந்தி குலசிங்கம்

சட்டக்கல்லூரி சட்டத்தரணி பரீட்சையில் சித்தியடைந்து 14.12.2006 அன்று கொழும்பு உயர்நீதிமன்றில் மேன்மைக்குரிய நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்க முன்னிலையில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். இவர் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றின் பழைய மாணவியும் கொழும்பு பல்கலைக்கழக சட்ட மாணியும் ஆவார். இவர் காட்டுத்துறை விநாயகர் அருளும் கடையிற்சுவாமியார் ஆசியும் பெற்று துர்க்கை அம்மன் வழிகாட்டலில் பல முன்னேற்றங்களைப் பெற வாழ்த்தும்

தகவல்: இ.விஜயேந்திரன் (மாமா)
மில் ஒழுங்கை, சிறாம்பி, கோக்குவில். (56888)

பெற்றோர், உறவினர்,
நண்பர், அயலவர்.

## சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலைப் பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையும் உப உணவும் ஆகும். குருதியில் குளுக்கோசையும் கொலஸ்ரோலையும் கட்டுப்படுத்தும் காரணியுடன் விற்றமின் ACயுடன் இரும்பு, நாகம், குரோமியம், கல்சியம், நார்ப்பொருள்கள் போன்ற நன்மை பயக்கும் பொருள்களையும் கொண்டது.

**BIO TEC ORIENT (PVT) LTD**
131/2, பலாலி வீதி, திருநெல்வேலி.
[பாம் ஸ்கூல் அருகில்]
தொ.பே. 021 4590907
32/3, ரெயில்வே அவனியூ,
கொழும்பு - 05
(55468) தொ.பே. 0112 852269

## மணமகன் தேவை

இந்துவெள்ளாள குடும்பத்தைச் சேர்ந்த, ஆண்டு 1978, நட்சத்திரம் திருவோணம் 4ஆம் கால், மகரராசி, உயரம் 5'6'', கிரக பாவம் 56 உடைய மணமகளிற்கு ஐரோப்பா மணமகன் தேவை.

தொடர்பு:- T.P.: 01746197831
(சி/51588) ஜேர்மனி.

## மணமகள் தேவை

ஆஸ்திரேலிய நிரந்தர வதிவுரிமையுடைய, வயது 30, உயரம் 5' 9'', B.Com. (Special) பட்டதாரி, கணக்காளர் மகனுக்கு தாயார் 27 வயதுக்குட்பட்ட பெண்ணைத் தேடுகின்றார்.

தொடர்பு:
T.P.: 0112362252
E-mail: proposalan@yahoo.com
(சி/51499)

## புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

**COMPUTER EXPRESS**
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office
No 15,
Sirambiyadi Lane.
(off Stanly Rd.)
021-222 8250,
0777 222422

Branch office
No 167,
Kasthuriyar Rd,
(Near Uthayan Publication)
Jaffna.

### Diploma in Hardware Engineering
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..

Course Fee :2000/=

### Diploma in Computerized Accounting
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.

Course Fee :3500/=

### Diploma in Video Mixing
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.

Course Fee :3000/=

### Diploma in Graphic Designing
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macromedia Flash MX

Course Fee :2000/=

**ஒரே நாளில் ஆரம்பம்:- 18/12/2006 - 08.30**

மாணவர்களின் நலன்கருதி எமது கிளை நிறுவனத்தினை **இல 167,கஸ்தூரியார் வீதியில் (உதயன் பணிமனை அருகில்)** ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
வகுப்புக்கள் அனைத்தும் எமது கிளை நிறுவனத்திலேயே நடைபெறும். அனுமதியினை தலைமையகத்திலும் கிளை நிறுவனத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

## UNIVERSITY of CAMBRIDGE ENGLISH COURSES

**உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் பரீட்சைகள்**

- உலகத்தில் எப்பாகத்திலும் நல்லதொரு தொழிலைத் தேடிப் பெற்றுக்கொள்ள, பூரணமான ஆங்கில அறிவைப் பெற
- உலகத்தில் எந்தப் பல்கலைக்கழகத்திலும் மேற்படிப்பை மேற்கொள்ள வேண்டிய தகைமையைப் பெற.

UNIVERSITY of CAMBRIDGE இன் பின்வரும் ஆங்கிலப் பாடநெறி ஒன்றில் இன்றே சேர்ந்து கொள்ளுங்கள்.

**CAMBRIDGE PRELIMINARY ENGLISH TEST (PET)**

- BRITISH COLLEGE OF ENGLISH இல் வகுப்புகள் திங்கள் தொடக்கம் வியாழன் வரை இரண்டு மணி நேரம் தொடர்ந்து ஐந்து மாதங்கட்கு நடைபெறும்.
- யூன் 2007 இல் பரீட்சைகள் கொழும்பில் BRITISH COUNCIL இல் நடைபெறும்.

**CAMBRIDGE FIRST CERTIFICATE IN ENGLISH (FCE)**

- இது ஒரு மிகவும் உயர்ந்த ஆங்கிலப் பாடநெறி, உலகின் பெரும் பாலான பல்கலைக் கழகங்கள் ஆங்கில தகுதிக்கு IELTS இற்குப் பதிலாக FCE ஐ ஏற்றுக்கொள்கின்றன. எந்த நேரத்திலும் உங்கள் ஆங்கிலத் தேவையைப் பூர்த்திசெய்யும் தலை சிறந்த சான்றிதழ்.
- BRITISHCOLLEGE OF ENGLISH இல் FCE வகுப்புகள் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறும். பரீட்சை யூன் மாதம் கொழும்பில் நடைபெற்று மூன்று மாதங்களில் சான்றிதழ் LONDON இலிருந்து கிடைக்கப் பெறுவீர்கள்.
- Each examination covers the four main language skills: Listening, Speaking, Reading and Writing. Speaking பரீட்சையின் போது பரீட்சார்த்தி 30 நிமிடங்கட்கு ஆங்கிலேயர் களுடன் சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டும்.

**IELTS** ESSENTIAL ENGLISH LANGUAGE EXAMINATION FOR HIGHER STUDIES, WORK OR MIGRATION PURPOSES IN U.K., AUSTRALIA, NEW ZELAND, CANADA, USA, நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் இங்கு பயிற்சி பெற்று நல்ல பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். British Council இன் அங்கீகாரம் பெற்ற நிறுவனம். முற்றிலும் புதிய நூல்கள் வேண்டிய நேரம் Listening Practice செய்ய வசதிகள் பேச்சுப் பயிற்சி போன்ற சகல பாடநெறிகளும் British Council Colombo இன் நடைமுறை போன்றே. வகுப்புக்கள் திங்கள் தொடக்கம் வியாழன் வரை பகல் 12.00 - 2.00 வரை Step Upto IELTS Programme. சனி, ஞாயிறு நாட்களில் 8.00 - 11.00 மணி வரை Advanced Exam Level Programme.

**புதிய வகுப்புக்கள் 05.01.2007 இல் ஆரம்பமாகின்றன**

**BRITISH COLLEGE OF ENGLISH**
141,Adiyapatham Road, Thirunelvely

## கிழக்கு ஐரோப்பிய, ரஷ்ய நாடுகளில் உயர்கல்வி

**Belaras** (பெலாரஸ்), **Russia** (ரஷ்ய) பிரபல பல்கலைக்கழகங்களில் மருத்துவ, பொறியியல் கற்கை நெறிகள்.

★ விண்ணப்பித்து 20 நாள்களுக்குள் பல்கலைக்கழகம் செல்லலாம்.
★ 100% விசா உத்தரவாதம்
★ ஸ்பொன்சர் தேவையில்லை
★ மிகக் குறைந்த கட்டணங்கள்
★ விடுமுறைகளுக்குப் பிற ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லலாம்.

இம்முறை O/L எடுக்கும் மாணவர்களும் உயர்பாடசாலை கல்வியை Belaras இல் பெற்று பல்கலைக்கழகப் படிப்பைத் தொடரலாம்.

★ இவ்வாண்டு, 14 யாழ். மாணவர்கள் தமது கல்வியை எமது நிறுவனத்தினூடு பாதுகாப்பாக மேற்கொள்கின்றனர்.

உலகத்தரத்திலான கல்வியை ஐரோப்பிய நாகரிகம் - பண்பாடு, செழுமையான பாரம்பரியங்கள் மிகுந்த ஜேர்மனி, போலந்து, ஆஸ்திரியா ஆகிய நாடுகளினால் சூழப்பட்டதுமான பெலாரஸ் கிழக்கு ஐரோப்பிய நாட்டில் பெறுங்கள்.

தொடர்புகளுக்கு: *மாலை 5.30 இற்குப் பின் உரிய ஆவணங்களுடன் நேரில் சந்திக்கவும்.*

**Office of the Sri Lankan Coordinator**
இல.02, திருவள்ளுவர் ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

*குறிப்பு:* பல்கலைக்கழக இறுதி விண்ணப்பத்திகதி 26.12.2006

(56810)

## கண்ணீர் அஞ்சலி

### சின்னையா சிவப்பிரகாசபிள்ளை
(குண்டுமணி மாஸ்ரர்)



எமது ஆலய தேர்த் திருவிழா உபயகாரரின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துட்டகிரி முருகன் கோயில்
தேவஸ்தான தர்மகர்த்தா சபை,
வழிபடுவோர் சங்கம்.

நவாலி. (சி/51550)

## காந்திக்கிராம் கிராமிய பல்கலைக்கழகம் (இந்தியா) தொலைதூரக்கல்வி கற்பதற்கான ஓர் பொன்னான வாய்ப்பு

சேவா லங்கா மன்றம் காந்திக்கிராம் கிராமிய பல்கலைக்கழகத்துடன் (காந்திக்கிராம் கிராமிய பல்கலைக்கழகம், காந்திக்கிராம் - 624302, திண்டுக்கல், தமிழ்நாடு, இந்தியா.) இணைந்து இலங்கை மாணவர்கள் கல்வி கற்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. விருப்பமுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இங்கு இரண்டு பிரிவுகள் உள்ளன.

1. Regular Programme (Group A)
2. Diploma in Certificate Programme (Group B)

Regular Programme, இப் பல்கலைக்கழகத்தில் 2007ம் ஆண்டு ஆனி மாதம் ஆரம்பிக்கவுள்ளது. தெரிவு செய்யப்படும் மாணவர்கள் 2007ம் ஆண்டு தை மாதம் இந்தியா செல்ல முடியும். Diploma in Certificate Programme பயில விரும்புபவர்கள் ஒன்று அல்லது இரண்டு பாடநெறிகளை கற்க முடியும்.

**GROUP(A): REGULAR PROGRAMMES**

| Courses | Yrs | Courses | Yrs |
|---|---|---|---|
| Dip. In Agriculture | 2 | B.Tech. Habitat Engineering | 4 |
| PG Dip.In Seed Production | 1 | B.Tech.Sustainable Technology and Rual Industries | 4 |
| M.Sc.Diary Science | 2 | MBA Disaster Management | 2 |
| M.Sc.Medicinal Plants | 2 | MA Sociology | 2 |
| MA English & Communicative Studies | 2 | M.Phil.Development Sociology | 1 |
| M.Phil.English&CommunicativeStudies | 1 | MBA Small Business Management | 2 |
| B.Sc. /M.Sc.Physics | 3/2 | MBA Rural Industries Management | 2 |
| B.Sc/M.Sc Chemistry | 3/2 | BBA Rural Industries &Management | 3 |
| B.Sc Maths | 3 | MA.Development Administration(for A/L Passed) | 5 |
| M.Sc Tech.(Industrial Maths with Comp. Applications) | 3 | BA.Gandhian Social Work | 3 |
| M.Sc Extension &Community Development | 2 | MA Human Resource& Conflict Management | 2 |
| B.Sc Homescience | 3 | B.Com.Cooperation | 3 |
| M.Sc Food Science&Nutrition | 2 | M.Sc Geo Informatics | 2 |
| MCA(Master in Computer Applications) | 3 | M.Phil. Micro-Level Planning | 1 |
| M.Sc Information Technology | 2 | MBA Rural Project Management | 2 |

**GROUP(B): ADD-ON PROGRAMMES(3-6MONTHS)**

| | |
|---|---|
| Medical Lab Technology | Dip.in Human Rights* |
| Cert.in English Communication(Advanced) | Dip.in Entreprenesurship* |
| Dip.in English Communications Skills | Dip.in Garment Technology |
| Dip.in Biological Technologies | Dip.in Natural Dyes |
| Cert.in Multimedia | Dip.in Project Planning |
| Dip.in Fruit Processing | Dip.in Training and Development |
| Dip.in Bakery&Confectionary | Dip.in Journalism |
| Dip. in Cost Effective Construction Technology | Dip.in Mass Communication |

விண்ணப்பப்படிவங்களை இலங்கையிலுள்ள சேவா லங்கா மாவட்ட காரியாலயங்களில் நேரடியாக பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி 24.12.2006. தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கான நேர்முகத்தேர்வு தை மாதம் 2007ம் ஆண்டு 3ம், 4ம் கிழமைகளில் கொழும்பு, கண்டி, வவுனியா ஆகிய இடங்களில் நடைபெறும்.

E-mail : gandhigram@sewalanka.org
Website : www.[illegible]
Tel : 0602166333, 0602166334, 0602166335

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.17

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு சங்க அலுவலகத்தில் தலைவர் இ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (202)

## தற்காலிக நியமனம்

குருநகர்,டிசெ.17

யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிபெற்ற மாணவ குடும்ப நல உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மன்னார் ஆகிய இடங்களிலுள்ள பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகங்களின் கீழ் இயங்கிவரும் வைத்திய நிறுவனங்களுக்கு கடந்த முதலாம் திகதி முதல் தற்காலிக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். (51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

# வாகரையில் மனிதப் பேரவலம்

சமாதானத்தின் மீதான நம்பிக்கைகள்அடியோடு அற்றுப் போன நிலையில், இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் மக்கள் போர்க்கால அவலங்களுக்கும் அழிவுகளுக்கும் முகம்கொடுக்கத் தொடங்கிவிட்டனர். புத்தாண்டு பிறப்பதற்கு இன்னும் இரு வாரங்களே இருக்கின்றன. உலகிற்கு சமாதானத்தைப் போதிக்க வந்த யேசுபிரானின் அவதார தினத்தைக் கொண்டாடி மகிழ உலகம் தயாராகிருவருகிறது. ஆனால், இலங்கையில் தமிழர்களையும் ஏனைய இனத்தவர்களையும் போர் பற்றிய பயமே மீண்டும் கௌவத் தொடங்கி உள்ளது. சமாதானம் தூர விலகிச் செல்கிறதே என்ற ஏக்கத்துடனேயே அவர்கள் புத்தாண்டை எதிர்கொள்கின்றனர்.

நாட்டின் வடக்கிலும், கிழக்கிலும் போக்குவரத்து மார்க்கங்கள் துண்டித்த நிலையில் லட்சக்கணக்கான தமிழ் மக்கள் சுயாதீனமாக நடமாடும் அடிப்படை உரிமையை இழந்து பல மாதங்கள் கடந்துவிட்டன.

வடக்கில், யாழ்.குடாநாட்டை நாட்டின் இதர பகுதிகளோடு இணைக்கும் ஏ-9 நெடுஞ்சாலையும், கிழக்கில் வாகரை மற்றும் கதிரவெளிப் பகுதிகளை ஏனைய பிரதேசங்களுடன் தொடுக்கும் ஏ-15 நெடுஞ்சாலையும் மூடப்பட்டுக் கிடக்கின்றன. சமாதானத்துக்கான பாதைகளைப் போல்.

'உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள்' (IDPS) என்று ஐக்கிய நாடுகள் சபையால் கணிக்கப்படுகின்ற சுமார் 40 ஆயிரம் பொது மக்கள் வாகரையில் அடிக்கடி நடக்கும் மோதல்கள், போக்குவரத்துத் தடை, அத்தியாவசியப் பொருள் தட்டுப்பாடு, மருந்துத் தட்டுப்பாடு என்பன காரணமாகப் பெரும் அவலப்படுகின்றனர்.

அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே அடிக்கடி இடம்பெறும் ஷெல் மோதல்கள், வான்வழிக் குண்டு வீச்சுகள், தரைச் சண்டைகளில் சிக்குண்டு, இடத்துக்கு இடம் அலைந்து இருப்பிடம் இன்றி அந்திரித்து நிற்கின்றனர் இந்த மக்கள்.

வாகரைப் பகுதியில் பெரும் மோதல்கள் வெடிக்கலாம் என்று அஞ்சும் இவர்கள், கடந்த நில நாட்களாக அங்கிருந்து வெளியேறி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்ல முயற்சித்துவருகின்றனர். பாதுகாப்பான தரைப்பாதையை இராணுவம் மூடிவைத்திருப்பதால் ஆபத்து நிறைந்த கடல்வழியைப் பயன்படுத்தி பல குடும்பங்கள் வெளியேறிவருகின்றன. இவ்வாறு அங்கிருந்து படகுகளில் வெளியேறிய சுமார் 14 அகதிகள் வெள்ளிக்கிழமை அதிகாலை கடலில் படகு கவிழ்ந்து மாண்டுபோன அவலச்சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. வாகரையில் உருவாகியிருக்கும் மனிதப் பேரவலத்தையும் போரின் கொடூர முகத்தையும் இச்சம்பவம் வெளியுலகத்துக்கு வெளிப்படுத்தியிருக்கின்றது.

போர்நிறுத்த உடன்படிக்கையில் வரையறை செய்யப்பட்டிருக்கும் தரைக் கட்டுப்பாட்டு நிலைமை தற்போது கிழக்கில் இல்லை. சம்பூர் சண்டை முதல் அடுத்தடுத்து இடம்பெற்ற மோதல்கள், நில ஆக்கிரமிப்புகளால் கிழக்கின் களநிலைமை மக்களை வெகுவாகப் பாதித்திருக்கிறது.

கிழக்கில் இடம்பெறும் தாக்குதல்களில் தமிழ்மக்களோடு சிங்கள மக்களும் கூட பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இந்த நிலைமை தெரிந்தும் கூட பொதுமக்களின் நலனைப் பேணுவதற்கு முன்னுரிமை அளிப்பதாகக் கூறும் அரசு, அந்தப் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் இறுக்கிவருகின்றது. வாகரை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் அரசுப் படைகள் - புலிகள் இரு தரப்பினரும் இராணுவ இலக்குகளை மாத்திரமே தாக்குவதாகக் கூறிக்கொள்கின்றனர். ஆனால் அங்குள்ள அப்பாவி சிவிலியன்களுக்கு ஏற்படும் உயிரிழப்புகள், அழிவுகளை நோக்கும் போது போரின் நேரடி இலக்குகளாக இந்த மக்கள் உள்ளனர் என்றே கொள்ளவேண்டியுள்ளது.

கிழக்கில் இருந்து விடுதலைப் புலிகளை முற்றாக வெளியேற்றும்வரை அரசுப்படைகளின் தாக்குதல்கள் தொடரும் என்ற சாரப்பட இராணுவத்தளபதி லெப்படினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா கருத்து வெளியிட்டிருக்கிறார். அவரது கூற்று இந்தப்பிரதேசத்தில் அடுத்து என்ன நடக்கப்போகின்றதோ என்ற அச்சத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறது. தரைவழி இன்றி முற்றுகைக்குள் சிக்குண்டிருக்கும் வாகரைப் பகுதி மக்கள் இந்த அச்சம் காரணமாகவே அங்கிருந்து வெளியேறிவிட அவதிப்படுகின்றனர் என்று அறியப்படுகிறது.

வாகரை அகதிகளின் அவலம் குறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும், ஐ.நா. தொண்டு நிறுவனங்களும் ஏற்கனவே கவலை வெளியிட்டுள்ளன.

இப்போதைய மக்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட்டு அவர்கள் தாங்கள் விரும்பும் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்வதற்கான நடமாடும் சுதந்திரத்தை மோதலில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்புகளும் உறுதி செய்ய வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை சில தினங்களுக்கு முன்னர் வலியுறுத்தி இருந்தது. ஐ.நா.வின் இந்த வற்புறுத்தல் வெளியிடப்பட்டு சில தினங்களுக்குள் வாகரை அகதிகள் 14 பேர் படகு அனர்த்தத்தில் பலியாக நேர்ந்திருக்கிறது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த வாகரை மக்களைத் தங்க வைப்பதற்கான 'பாதுகாப்பு பகுதி' (Safe Haven) ஒன்றை உருவாக்கத் தயார் என்று அரசு கூறியிருக்கிறது. இந்த யோசனைக்குப் புலிகள் இணங்கிவர வேண்டும் என்று அது கேட்டிருக்கிறது. இந்த அகதிகளுக்கான பாதுகாப்புப் பகுதியை தனது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நிறுவுவதே அரசின் நோக்கமாக இருக்கக்கூடும். ஆனால், அகதிகள் அனைவருமே பெரும்பாலும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே தங்கி உள்ளதால் அரசின் யோசனை சாத்தியமானதா என்ற கேள்வி எழுகின்றது.

வாகரைப் பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் அனைவருமே இடம்பெயர்ந்தவர்கள் என்பதால் அந்தப் பிரதேசம் முழுவதையுமே - ஒட்டுமொத்தமாக - பாதுகாப்புப் பகுதியாகப் பிரகடனம் செய்யுமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரட்ணசிங்கம் சர்வதேச சமூகத்திடம் கேட்டிருக்கிறார்.

வாகரை அகதிகளின் உயிர் வாழவோடு சம்பந்தப்பட்ட இந்த மாபெரும் மனிதாபிமானப் பிரச்சினையை மோதலில் ஈடுபடுவோர் குறிப்பாக அரசுத்தரப்பு, அதிவிரைவாகக் கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டும். தாமதிப்பது அகதிகள் விடயத்தில் ஐ.நாவின் நேரடித் தலையீடுகளுக்கு வழிவகுத்து விடவும் கூடும்.

தமிழ்மக்களை இன்னமும் தனது பிரஜைகள் என்று கூறிக் கொள்ளும் தென்னிலங்கை அரசு, வாகரை அகதிகள் விவகாரத்தில் அதற்குள்ள பொறுப்பை - கடப்பாட்டை- நிறைவேற்றுமா?

# யாழ். போதனா வைத்தியசாலையின் 'எக்ஸ்றே' இயந்திரம் பழுதடைந்தது

## நோயாளருக்கான சிகிச்சை பாதிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.17

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பாவனையில் இருந்த இரண்டு 'எக்ஸ்றே' இயந்திரங்களில் ஒன்று முற்றாகப் பழுதடைந்துவிட்டது.

அதன் காரணமாக எக்ஸ்றே சேவை ஐம்பது சதவீதம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் நாளாந்தம் 220 நோயாளருக்கு 'எக்ஸ்றே' எடுக்கப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டது. இப்போது 100 தொடக்கம் 110 நோயாளருக்கு மட்டுமே அந்த வசதி கிடைக்கிறது.

நீண்டகாலமாகச் சேவையில் நிலையாக இருப்பில் உள்ள விடுதிகளுக்கு எடுத்துச்செல்லமுடியாத - இரண்டு இயந்திரங்களே பாவனையில் இருந்து வந்தன. அவற்றில் ஒன்று திருத்தமுடியாத அளவுக்குப் பழுதடைந்துவிட்டது. இப்போது செயற்படும் இயந்திரமும் அடிக்கடி பழுதடைகிறது.

குடாநாட்டைச் சேர்ந்த நோயாளர்களுக்கு மட்டுமன்றி ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த நோயாளர்களுக்குமான பிரதான வைத்தியசாலையாக விளங்கும் யாழ். போதனா வைத்தியசாலை விளங்குவதால் -

அவசரமாகவும் அதனைக் கொள்வனவு செய்வதற்கு 45லட்சம் ரூபா தேவைப்படுகிறது. உள்நாட்டில் உள்ளவர்கள் மட்டுமன்றி வெளிநடுகளில் உள்ள மனிதநேயமுள்ள அன்பர்களும் புதிய இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு உதவலாம் என்று யாழ். போதனா வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

www.jaffnahospital.com என்ற இணையத்தளம் மூலம் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற இயலும் என்றும் அபிவிருத்திச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

# வலி.மேற்குக் கடலில் மீன்பிடிக்க அனுமதிக்கக் கோரி அரச அதிபருக்கு மகஜர்

வலி.மேற்குப் பிரிவில் சவுக்கடி, புளியந்துறை, திருவடிநிலை ஆகிய பிரதேசங்களின் கடற்றொழிலாளர்கள் தாம் தொழில் செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்து தருமாறு யாழ். அரச அதிபரிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஓகஸ்ட் 11ஆம் திகதிக்குப் பின்னர் குடாநாட்டில் நிலவிவரும் அசாதாரண சூழ்நிலை காரணமாகப் பாதுகாப்புக் கருதி தொழில் செய்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டது. 3 மாதங்கள் கடந்த நிலையிலும் இது வரை தொழில் செய்ய எமது பிரதேச தொழிலாளர்களை அனுமதிக்கவில்லை. இதனால், மீனவக் குடும்பங்கள் வருமானமின்றி பெரும் கஷ்டங்களை அனுபவித்துவருகின்றனர்.

எனவே, மட்டுப்படுத்தப்பட்ட நேரங்களில், மட்டுப்படுத்தப்பட்ட தூரத்திற்குள்ளாயினும் மீன்பிடிப்பதற்கான அனுமதியைப் பாதுகாப்புத்தரப்பினரிடமிருந்து பெற்றுத்தாருங்கள் - என்றுள்ளது. (202-29)

# தடைப்பட்டுள்ள கட்டட வேலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை தேவை

## திணைக்களப் பொறியியலாளர் வற்புறுத்து

குருநகர்,டிசெ.17

யாழ்.மாவட்டத்தில் மூலப் பொருள்கள் தட்டுப்பாட்டால் தடைப்பட்டுள்ள கட்டட வேலைகளை மீள ஆரம்பிக் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு யாழ். பிராந்திய கட்டடத் திணைக்களப் பொறியியலாளர் யாழ்.அரச அதிபரிடம் வலியுறுத்தியுள்ளார்.

மாவட்டத்தில் தற்போது நிலவிவரும் அசாதாரண சூழ்நிலை காரணமாகவும் மணல், சிமெந்து, இரும்பு ஆகிய மூலப் பொருள்கள் தருவிக்கப்படாமையாலும் புதிய கட்டடங்களை அமைத்தல், பழைய கட்டடங்களைப் புனரமைத்தல் ஆகிய பணிகள் முடங்கி விட்டன.

எனவே மூலப் பொருள்களைப் பெறுவதற்கும் கட்டட வேலைகளை மீள ஆரம்பிப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் - பொறியியலாளர்கள் அரசஅதிபருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(202-51)

# நலன்புரி முகாம் சிறுவர்களுக்கு உளவலுவூட்டல் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.17

யாழ்.சமூக செயற்பாட்டு மையம் நலன்புரி முகாம்களில் உள்ள சிறுவர்களுக்கு இடர்கால விழிப்பூட்டல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகிறது.

சுனாமியாலும் மற்றும் சமகால யுத்தநிலையாலும் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கி இருப்பவர்களுக்கு விசேடமாக ஏழு வயது தொடக்கம் 18 வயது வரையான சிறுவர்களுக்கு உளவியல் வலுவூட்டல் தொடர்பான செயற்பாடுகளில் தமது அமைப்பு ஈடுபட்டுவருவதாக யாழ். சமூக செயற்பாட்டு மைய இணைப்பதிகாரி ந.சுகிர்தராசன் உதயனுக்குத் தெரிவித்தார்.

வடமராட்சியில் கொற்றாவத்தை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, கரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, தென்மராட்சியில் மந்துவில் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் உள்ள நலன்புரி முகாம்களில் உள்ளவர்களுக்கு உளவியல் வலுவூட்டல் செயற்பாடுகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

சுகாதாரம் பேணுதல், சுத்தமாக இருத்தல், இடர்கால முகாமைத்துவம், பாலியல் வன்முறைகளில் இருந்து விடுபடுதல், அபாய தவிர்ப்பு(மிதிவெடி) தொடர்பான நெறிப்படுதல்களில் நிறுவன அங்கத்தவர்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

மாலை நேரக் கல்வி வழங்குவதுடன் மாணவர் கல்வியை ஊக்குவிப்பதற்கான எழுது கருவிகள், விளக்குகள் அதற்கான எரிபொருள் என்பனவும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான நிறுவனத்தின் உதவியுடன் தங்குமிட முகாம்கள்(கொட்டகைகள்) அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளதுடன் மாணவர்களின் மாலைநேரக் கல்விக்கான அமைப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளதாக இணைப்பதிகாரி மேலும் தெரிவித்தார் (88)

## நாளை

மார்கழி 03
திங்கட்கிழமை
19.12.2006
திதி : திரயோதசி
முன்னிரவு 07.28
நட்சத்திரம் : விசாகம்
முற்பகல் 09.52
சுபநேரம் : 12.23 - 01.53
ராகுகாலம் : 07.53 - 09.23

# யூரியா உரம் விநியோகம்

சாவகச்சேரி,டிசெ.17

தென்மராட்சி, மீசாலை - புத்தூர் சந்தியிலுள்ள சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில், யூறியா உரம் மானிய விலையில் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

விவசாயிகள் தங்கள் பகுதி விவசாய சம்மேளனங்கள் ஊடாக அனுப்பிய விண்ணப்பங்களின் அடிப்படையிலேயே உரம் வழங்கப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் உரம் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் கமநல சேவை நிலையம் விவசாயிகளால் நிறைந்து காணப்படுகிறது.

(31)

# பேக்கரிகளுக்கு அறிவுறுத்தல்

யாழ். மாவட்டத்திலுள்ள பாண் உற்பத்தி செய்யும் பேக்கரிகளில் பேபிறஸ்க், வட்டறஸ்க், மடத்தல்றஸ்க் ஆகியவற்றையும் உற்பத்தி செய்ய அரச அதிபர் அனுமதி வழங்கியுள்ளார்.

உற்பத்தி செய்யப்படும் இந்தப் பொருள்களுக்கான விற்பனை விலையையும் அரச அதிபர் அறிவித்துள்ளார்.

பேபிறஸ்க் 100 கிராம் 20 ரூபாவாகவும், வட்ட றஸ்க் ஒன்று 2 ரூபாவாகவும், மடத்தல் றஸ்க் ஒன்று 2 ரூபா 50 சதமாகவும் விற்பனை செய்யவேண்டும் என்றும் -

குறிப்பிட்ட விலைக்கு மேல் விற்பனை செய்பவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (202)

# சடலங்கள் மீட்பு

## ஊர்காவற்றுறையில்...

யாழ்ப்பாணம்,டிசெ.17

வீட்டில் இருந்து காணாமற்போன பெண் ஒருவர் நேற்றுக்காலை கிணறு ஒன்றில் சடலமாக மீட்கப்பட்டார்.

ஊர்காவற்றுறை சரவணைப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அப்பகுதியைச் சேர்ந்த எஸ்.லில்லிமலர்(வயது 48) என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த பெண் நேற்றுமுன்தினம் இரவு வீட்டில் இருந்து காணாமற்போயிருந்ததாகவும் பின்னர் நேற்றுக் காலை அப்பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் சடலமாகக் காணப்பட்டதாகவும் அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

குறித்த பெண் அணிந்திருந்த தங்க நகைகள் அனைத்தும் அபரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (8)

## மிருசுவிலில்...

யாழ்ப்பாணம்,டிசெ.17

மிருசுவில் பகுதியில் தனியாக வாழ்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

முருகேசு சத்தியநாதன்(வயது 55) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவர்.

மரணமானவர் அன்றையதினம் சிலருடன் சேர்ந்து மது அருந்தியதாகவும் அவர்களே இவரை அடித்துக் கொலை செய்துவிட்டு அவரது வாகனத்திலேயே தப்பிச் சென்றதாகவும் விசாரணைகளில் கூறப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் ஒருவர் இராணுவத்தினரிடம் பிடிபட்டார் என ஒரு தகவல் தெரிவித்தது. (202)

# மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.17

கொகுவில் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை ஆறுகால்மடம் வைத்திலிங்க வித்தியாலயத்தில் இலவச மருத்துவ முகாம் நடத்தப்படவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களால் சிகிச்சைகளும் வழங்கப்படும். (202-79)

* * *

அமரர் சொக்கலிங்கம் துரைஐயாவின் 2ஆம் ஆண்டு சிரார்த்த தினத்தை முன்னிட்டு மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம் மற்றும் சந்திரன் பான்சி பலஸ் ஆகியவற்றின் அனுசரணையுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை ஆனைக்கோட்டை துரை ஐயா மண்டபத்தில் இலவச மருத்துவ முகாம் நடை பெறவுள்ளது. வைத்தியகலாநிதி பாலசுப்பிரமணியம் மருத்துவ முகாமை நடத்துவார். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகரையில் பாதுகாப்பு வலயம் உருவாக்க திருமலை எம்.பி. வலியுறுத்தல்

திருகோணமலை,டிசெ.17

வாகரை மக்களின் நலன் கருதி அங்கு பாதுகாப்பு வலயம் ஒன்றை உண்டாக்குவதற்குப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் சர்வதேசமும் இணைந்து இலங்கை அரசாங்கத்தை இணங்கச் செய்யவேண்டும்.

இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரட்ணசிங்கம்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது:-

படையினரின் தொடர்ச்சியான தாக்குதல்களால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் வாகரையில் அகப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் ஒரு பாதுகாப்பு வலயத்தை வாகரையில் ஏற்படுத்தவேண்டும்.

வாகரையில் பட்டினியால் வாடும் தமிழ்க் குழந்தைகள், எறிகணை மற்றும் வான் தாக்குதல்களில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வெறுங்கைகளாலும் அரசு சாராத தொண்டர் நிறுவனங்கள் வழங்கிய அலுமினியத் தகடுகளாலும் பதுங்கு குழிகளைத் தோண்டுகிறார்கள்.

அதேவேளையில், உதவி நிதிகளும் இயந்திரங்களும் கல்லாறு பகுதி யில் சிறிலங்காப் படைமுகாம்களுக்கு அருகில் வாழும் சிங்கள மக்களுக்கு வழங்கப் பட்டு வருகின்றன.

மனிதாபிமான உதவிகளைப் பெறவும் மருத்துவ சிகிச்சை பெறவும் அகதிகள், கடல் பரப்புக்களையும் தாண்டி பல மைல் தூரம் நடக்க வைக்கப்படுகிறார்கள்.

திருகோணமலையில் தங்களது பாரம்பரிய சொந்தக் கிராமங்களில் இருந்து தமிழ் மக்கள் காலத்துக்குக்காலம்சிறிலங்கா இராணுவத்தாலும் சிங்களக் குண்டர்களாலும் விரட்டியடிக்கப்பட்டதை நாங்கள் நேரடியாகக் கண்டிருக்கின்றோம்.அவ்வாறுஇடம்பெயர்ந்தவர்கள் தங்கள் ஊருக்குத்திரும்பி வர மீண்டும் அனுமதிக்கப்படவில்லை. எனவே வாகரையில் தமிழ்மக்களை விரட்டியடிக்கும் சிறிலங்கா அரசாங்கத்தின் நோக்கத்துக் குத் துணை போகவேண்டாம் என அனைத்துலக சமூகத்தைக் கேட்டுக்கொள்கின்றேன்.

## வாகரையில் ஷெல் தாக்குதல் ஏழு அகதிகள் உயிரிழப்பு

கொழும்பு,டிசெ.17

வாகரையில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் 7 பொது மக்கள் உயிரிழந்திருக்கலாம் என இணைய தளம் ஒன்று தெரிவித்தது.

இடம்பெயர்ந்து தங்கியிருந்த இவர்கள் கதிரவெளியிலிருந்து வாகரை நோக்கி டிரெக்ரர் ஒன்றில் சென்றுகொண்டிருந்த வேளை இத்தாக்குதலுக்கு இலக்கானார்கள் என்றும் - வைத்திய அதிகாரிகள் இதில் காயமடைந்தனர் என்றும் - அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்தது.

வாகரை கதிரவெளியை நோக்கி நேற்றுக்காலை 11.30 மணிமுதல் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றதாகவும் -

அதில் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை என்றும் அந்த இணையத் தளம் மேலும் தெரிவித்தது.

(1)

## கோயில் குடியிருப்பில் பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு

தென்மராட்சி,டிசெ.17

சாவகச்சேரி கோயில் குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவு குடியிருப்பாளர்களின் உண வுப்பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணிதொடக்கம் பிரதேச செலயக உத்தியோகத்தர்களால் பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

குடும்பத்தலைவர் அல்லது குடும்ப உறுப் பினர் தமது தேசிய அடையாள அட்டையுடன் பங்கீட்டு அட்டையினையும் கிராம அலவலர் அலுவலகத்திற்கு கொண்டு வருமாறு பிரிவு கிராம அலுவலர் க.செல்வராசா அறிவித்துள்ளார்.

## வாகரையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் தரப்பில் திருகோணமலை அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலன், சமாதானச் செயலகத்தின் செயலாளர் நாயகம் எஸ்.புலித் தேவன், இராணுவப் பேச்சாளர் ஆர்.இளந்திரையன், ஐ.நா. மற்றும் சர்வதேச அமைப்புகளுக்கான தொடர்பாளர் எம். தியாகராஜா ஆகியோர் சந்திப்புகளில் கலந்துகொண்டனர்.

கடந்த சுமார் ஐந்து மாதகாலமாக இடத்துக்கு இடம் துரத்தப்பட்டுவரும் வாகரைப் பிரதேச அகதிகளுக்கு பாதுகாப்பு பிரதேசக் கோரிக்கை ஆறுதல் தரும் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

கிழக்கில் பல இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை ஒன்றாக ஓரிடத்தில் தங்கவைப்பதற்கான பகுதி ஒன்றை உருவாக்குவது குறித்து அரசு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, கண்காணிப்புக் குழு ஆகியவற்றிடம் யோசனை ஒன்றை முன்வைத்திருந்தது.

அந்தப் பகுதியைப் பாதுகாப்புப் பிர தேசமாகப் பிரகடனம் செய்வதற்கும் அரசு விருப்பம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(அ-1)

## சுவரொட்டிப்போட்டி: யாழ். மாணவர்கள் மூவருக்குப் பரிசில்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.17

தொழில் உறவுகள் மற்றும் வெளி நாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட சுவரொட்டிப் போட்டியில் யாழ். மாணவர்கள் மூவர் பரிசில்களைப் பெற்றுள்ளனர்.

அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டியில்யாழ். பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைத்துறை மாணவன் ர.பிரகாஷ் மூன்றாம் இடத்தையும் -

அனைத்துப் பாடசாலைகள் மட்டத்திலான போட்டியில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் தரம் 2 மாணவி ஜெயசாளினி கோகிலன் அதிவிசேட சித்தியையும் - யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை தரம் 2 மாணவி சுபாசினி சுகுமார் விசேட சித்தியையும் பெற்றுள்ளனர்.

பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் புதன் கிழமை கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(1-202)

## கோடிக்கரையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்த 80 மீனவர்கள் தமது தொழிலைக் கைவிட்டு பாதுகாப்புக் கருதி கரை போய்ச் சேர்ந்தனர்.

இதற்கு முன்னரும் கடந்த 10ஆம் திகதி கோடிக்கரைக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது கடற்படை வேட்டுக்களைத் தீர்த்திருந்தது. இதையடுத்து அப்பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த 180 மீனவர்கள் தமது தொழிலைக் கைவிட்டுக் கரைக்குத் திரும்பியிருந்தனர்.

மீண்டும் நேற்று முன்தினம் கோடிக் கரையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 80 மீனவர்களை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன என்றும் -

இதன் பின் மீனவர் மத்தியில் பதற்ற நிலை தோன்றியது என்றும் - தெரிவிக்கப் பட்டது.

இந்தச்சம்பவம் குறித்து மீனவர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

## சமாதானத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தமது நீண்ட உரையில் -

''பாலசிங்கத்தின் இழப்பு தமிழ்மக் களுக்கு பேரிழப்பு, நோர்வே தனது நண் பனை இழந்துவிட்டது. தமிழ் மக்களின் பிரச்சினைகளை, உரிமைகளை, சமாதானத்தின்மீதான அவாவை எடுத்துச் சொன்ன முதன்மைக் குரலை இழந்துள்ளது.'' என்று குறிப்பிட்டார்.

(அ-1)


**யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்**

**பணியாளர் தேவை**

பதவி: களஞ்சியக் காப்பாளருக்கான உதவியாளர் (S.K.)
வயது: 40 தொடக்கம் 55 வரை
தகைமை: முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
குறிப்பு: மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை.
காலம்: 18.12.2006 அன்று காலை 11 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

(51573) செயலாளர்.


## விண்ணக வாழ்வில் 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 28 . 03 . 1928

உதிர்வு: 17 . 11 . 2006

### அமரர் அலேஸ் வேதநாயகம்

"உயிரும் உயிர்ப்பும் நானே, என்னில் விசுவாசம் கோள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

எங்கள் அருமை பப்பா! மின்னாமல் முழங்காமல் எங்களை விட்டுப் பிரிந்து சென்றீரோ? இறைவன் உம்மை தன்னகத்தில் எடுத்து கொண்டாரோ? இறை இல்லத்தில் உமது ஆன்மா இளைப்பாற இறைவனை வேண்டுகின்றோம். எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உம் நினைவு எம்மை விட்டு நீங்காது பப்பா.

"வேதஞானபதி"
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(56933)

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31நாள் நினைவலைகள்



மலர்வு: 25 . 10 . 1926

உதிர்வு: 19 . 11 . 2006

### அந்தோனிப்பிள்ளை கிறிசாந்தூஸ்

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கோள்பவர் இறப்பிலும் வாழ்வார்"

அந்தோனிப்பிள்ளை கிறிசாந்தூஸ் முதுமையின் எல்லை தொடரவில்லை. ஆயினும் ஆவி துறந்த எம் ஐயனே! பாசமிகு ஐயா! பாரினில் பரமனின் வழி காட்டி பாசத்தை நாளும் பொழிந்தீர்கள். பல ஆண்டுகள் எமக்காய்ப் பாடுபட்டு உழைத்தீர்கள். பிள்ளைகள் வாழப் பல துன்பங்களை வாழ்வில் அனுபவித்தீர்கள். உங்களைப் பிரிந்து ஆறாத் துயரில் வாடும் அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரி மேரி அனஸரேசியா மற்றும் உற்றார், உறவினர்.

• அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாளை (18.12.2006) காலை 6 மணிக்கு பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

தாளையடி. (சி.51569)

இவரின் பிரிவால் துயருறும்:
சகோதரி, மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.


**ITI**
ஸ்ரேசன் றோட் மல்லாகம்
GR. 6,7,8,9,10,O/L
MATHS - துஷி
Special Class
நடைபெறுகின்றது.
அனுமதிகள் அலுவலகத்தில்.

**DCM**
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A/L 2007, 2008
பொருளியல்
தடைப்பட்டிருந்த பொருளியல் வகுப்புகள் யாவும் இன்று (17.12.2006) 9 a.m ஆரம்பம்
இயக்குநர்.

**PAPER CLASS**
வணிகக்கல்வி
ஆரம்பம் :
18.12.2006 திங்கள் 10 a.m
By. யசோ
அலகு ரீதியாக கடந்தகால மாதிரி வினாத்தாள் மீட்டல்
யூனிவேர்சல்
(யாழ்.இந்து மகளிர் கல்லூரி அருகே)

**LOGIC**
P.கமல்
2007-பகுதிII
திங். புதன் - 4-5.30
ஞாயிறு - 1-2.30
2008, 2007 DAY
புதிய பிரிவுகள்
18/12/2006 திங்கள் 3 p.m
விடுமுறைக்கால மேலதிக நேர அட்டவணை அலுவலகத்தில் பெறவும்.
திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ் வீதி, இணுவில்.

**BECON TUTION**
பொருளியல்
M.விக்கி B.A(ECo) - (Spl) Hons, P.G.D.E
A/L 2007 and DAY BATCH
பேரினப் பொருளாதாரம்
செவ்., வியா. 3.00 - 4.00 p.m
A/L 2008
நெகிழ்ச்சிக்கோட்பாடு
Sat, Sun 12.00 - 1.00 p.m


## கண்ணீர் அஞ்சலி



ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வர்த்தக முகாமையாளராக கடமையாற்றிவரும்

ந.தனசீலன் அவர்களின் அன்புத் தந்தை

### வேலுப்பிள்ளை நவரத்தினம்

அவர்கள் 15.12.2006 காலமான செய்திகேட்டு துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி51574)

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
ஊர்.ப.நோ.கூ.சங்கம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னத்துரை சிவக்கொழுந்து

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவக்கொழுந்து 16.12.2006 சனிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் ஆனந்த நடராசா (ஓவசியர் அன்ரி மலேரியா), ஆனந்த லக்ஷ்மி, தியாகேஸ்வரி, தங்கரட்ணம் (உபஅதிபர் - யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்), அமரர் நடேசலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயும் சரஸ்வதி, அமரர் குருபாலசிங்கம், நித்தியானந்தன், இராஜரட்ணம் (ஓய்வுபெற்ற சமூகசேவை உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2006) ஞாயிற்றுக்கிழமை பி.ப.3மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
இராஜரட்ணம் (மருமகன்)

### வேலுப்பிள்ளை நவரத்தினம்



காரைநகரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நவரத்தினம் (இளைப்பாறிய பதிவாளர், யாழ்ப்பாணக் கச்சேரி) 15.12.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி வெற்றிவேல் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கண்மணியின் அன்புக் கணவரும் தனசீலன் (Purchasing officer, M.P.C.S, Kayts) வாசுகி (கிளிநொச்சி), கருணா (பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம்), லலினா (ஆசிரியை, உடையார் கட்டு) ஆகியோரின் அன்புத்தந்தையும் தயாளசுந்தரம், திவாகரன், ஸ்ரீசுகந்தி (ஆசிரியை யா/செங்குந்த இந்துக்கல்லூரி, கல்வியங்காடு) ஆகியோரின் அன்பு மாமனும் முத்துலிங்கம் (கிளிநொச்சி) காலஞ்சென்ற கருணைநாதன், சபாரத்தினம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் திருமதி நாகசுந்தரம் பிள்ளை (இந்தியா), காலஞ்சென்ற திருமதி கதிர்காமநாதன், திருமதி சிவச்செல்வன் (நீர்கொழும்பு), திருமதி கானமயில்நாதன், வைத்தியநாதன் (திருமலை), தயாநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் தர்சிகா, யதுசன், லக்ஸ்மன், கம்சனா ஆகியோரின் பேரனும் பாலேந்திரன், வளர்மதி, பத்மசோதி, அன்பழகன் (Baharain), லோசினி (உடையார்கட்டு), அன்புரு, சதீஸ் (யாழ்ப்பாணம்), சுதேஸ் (கொழும்பு), விஜிதா (லண்டன்), கம்சன் (ஜேர்மனி) ஆகியோரின் பெரிய தகப்பனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2006) மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

595/14, நாவலர் றோட்,
நல்லூர். தொ.பே.:2213.

தகவல்:
ந. தனசீலன், (மகன்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன்.(பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.12.2006இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org